# மறை ஞானப்பேழை

March 2024 மார்ச் 2024












Retail Selling Price 25

Volume - 16, Issue - 01

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

## அல் – இக்துத் தராரீ ஃபீ ஷரஹிஸ்

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

**ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி)**

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

---

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

---

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

---

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

மறை ஞானப் பேழை

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**

அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**

குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜுத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**

கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**

கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**

J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**

R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**

ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


ரஜப் -ஷஃபான்

மார்ச் 2024

Volume - 16 Issue -1


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்*
*திருமறைப் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*உமர் (ரலி) புராணம் - நயம்.*
*அறபு இலக்கிய வளர்ச்சி*
*தேடுகிறேன்... திருமுகம் எங்கே?*
*அறபு அறிஞர் இரங்கல் செய்தி.*
*முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி)*
*அன்னை பாத்திமா (ரலி)*
*என்றும் வாழும் பதுறு சஹாபாக்கள்.*
*ஜகாத்.*
*முப்பது நாள் மகத்துவம்.*
*நினைவேந்தல் - பட்டமளிப்பு விழா.*
*ஜமாதுல் அவ்வல் இருபதே!?*
*ஏ.மெ.சபை நோக்கங்கள்.*
*மற்றும் பல்சுவைச் செய்திகள்.*

# முன்னெடுப்பும் – முஹப்பத்தும்!

நமது உயிரினுக்குயிரான உயிரினும் உயர்வான வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் வாழ்வின் சாரமாக முக்கியமான விஷயங்களைத் தந்து சென்றிருக்கின்றார்கள். அது, ஒரு தந்தை, தன் மகன், வாழ்வில் முன்னேறவேண்டும் என்பதற்காகக் கொடுத்துச் செல்லும் முதலைப் (கேப்டலைப்) போன்றது.

அதை சரியாக முதலீடு செய்தால் தந்தை எப்படி வாழவேண்டுமென ஆசைப்பட்டாரோ அவ்வாறு மகன் வாழலாம். அதன் மூலம் தானும் மகிழ்ச்சியடைந்து தந்தைக்கும் நல்ல பெயர் சேர்க்கலாம்.

அந்தச் சொத்துக்கள்தான் நமது தரீகா– மற்றும் அதன் கடமைகள்.

செய்கு நாயகம் அவர்கள் காட்டிய வழிநின்று தொழுகை, இஸ்லாத்தின் மற்ற கடமைகள், தினமும் குர்ஆன் ஷரீப் ஓதுதல், பெருமானாரைக் கொண்டாடுதல், ராதிபு ஓதல், மாதக்கூட்டத்தில் கலந்து கொள்ளல் என முரீதின் கடமைகளைச் சரிவர நிறைவேற்றினால் நிச்சயமாக வாழ்வின் அனைத்து நிலைகளிலும் வெற்றிகள் தாமாக வந்து சேரும்.

**முக்கியமாக அவர்கள் நிறுவிய மதுரஸா– அதன் முன்னேற்றத்திற்காகப் பாடுபடுதல்.**

மதுரஸாவின் வளர்ச்சியைப் பொறுத்தவரை, நம் கண்களுக்குத் தெரியாத– இப்போது நம் பார்வைக்கு வராத ஆயிரக்கணக்கான மாணவச் செல்வங்கள் எதிர்காலத்தின் மடியில் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சரியான ஆன்மிகக் கல்வி இணைந்த ஸுன்னத் வல் ஜமாஅத் மதுரஸாவில் படிப்பதற்காக வரவிருக்கும் பிள்ளைகள், தாயின் கருக்களிலும், தந்தையின் முதுகுத் தண்டுகளிலும், வெளிவரக் காத்திருக்கின்றார்கள்.

அவர்களை நோக்கித்தான் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் இந்த மதுரஸாவைத் தோற்றுவித்திருக்கின்றார்கள்.

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் திருப்பேரர், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா நாயகம் அவர்களிடம் மெய்ஞ்ஞானம் படிப்பதற்காக ஆலமுல் அர்வாஹில் குட்டி ரூஹுகள் குதூகலத்தோடு காத்திருக்கின்றன.

அதற்கான களத்தைத் தயார் செய்வது தற்போதைய முரீதுகளாகிய நமக்குக் கடமையாக இருக்கிறது.

ஆதலால், முன்னைவிட இப்போது மதுரஸா வளர்ச்சியில் அதிக முன்னெடுப்புச் செய்வோம். வாப்பா நாயகம் அவர்களின் முஹப்பத்தில் நனைவோம்!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

**அஷ்ஷைகுல் காமில்**

**குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜுத்**

**ஜமாலிய்யா**

**அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா**

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



## *சத்தியப் பிரமாணத்தை மீறிவிடாதீர்கள்*

அதிகாலையில் எழுந்து சுப்ஹு தொழுதபின் குர்ஆன் ஷரீப் கண்டிப்பாக ஓத வேண்டும். மாதாந்த ஞான சபைக் கூட்டங்களில் கலந்து கொள்ள வேண்டும். 14ஆம் பிறையில் ராத்திபு கண்டிப்பாக ஓத வேண்டும். எல்லோரும் இவ்விதமே செய்து வாருங்கள். இவற்றிற்கு மாற்றமாக நடந்து விடாதீர்கள். இவற்றிற்கு மாற்றமாக நடந்தால் பைஅத் முறிந்துவிடும் என ஏற்கனவே பலமுறை கூறியிருக்கின்றோம். எனவே, இவற்றில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். இவைகள் தாம் நீங்கள் எடுத்துக் கொண்ட சத்தியப் பிரமாணம். அதற்கு மாற்றமாக நடந்து விடாதீர்கள்.

*– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

**என் கண்ணான வாப்பா நாயகம் அவர்கள் பிளஷ் அவுட், கிணறு இவைகள் பற்றிக் கூறினார்கள். டிக்ஷெனரிக்காக வைத்துள்ளதை வாப்பா நாயகம் எடுக்கவேண்டா மென்றும் லுகத்துக்கே வைக்குமாறும் கேட்டுக் கொண்டிருக் கிறார்களே, அதனாலும், மேலும் வாப்பா நாயகம் அவர்களின் படைப்புகளான அவர்களால் எழுதப்பட்ட கல்விக் கருவூலங்கள் அச்சிடப்படுவதே மிகமிக அவசியமான காரியமாகும். அதற்கு நீங்கள் ஒதுக்கியுள்ள பணத்தை அதற்கே வைத்துக் கொள்ளுங்கள். அவர்களின் பெரும் ஆசையும் அவர்களின் படைப்புக்கள் வீண்போகாது அச்சிடப்பட வேண்டும் என்பதேயாகும். அடுத்த வருடத்திலாவது அச்சிட வேண்டும். ஹக்கு அதற்கு அருள்புரியும். ஆவன செய்வோம்.**

**என் பேராசை, வாப்பா நாயகத்தால் இரவு பகலாக ஊண் உறக்கமின்றி நோயையும் பாராது தன் சுகமும் பாராது ஒரே எண்ணமாயிருந்து எழுதி முடித்த அரிய நூல்களை அச்சிடவேண்டும் என்பதேயாகும். பிளஷ் அவுட், கிணறு முதலியவற்றால் எம்மிற் குறிப்பிட்ட சிலரே பிரயோசனம் பெறுவோம். ஆனால் வாப்பா நாயகத்தின் படைப்புக்களால் உலகமனைத்தும் உண்மை ஒளியைப் பெற்றுப் பிரயோசனம் அடைவர்.**

***ஸாஹிபுல் வக்த், ஷம்ஸுல் முபீன், குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸைய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹாஷிமிய்யி வாப்பா நாயகம் அவர்கள் தங்கள் கலீபா அல்ஹாஜ், எஸ். அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு எழுதிய 11.11.1966 பட்டோலையிலிருந்து.*(தகவல்: கலீபா. டாக்டர். அஷ்ரப் அலி .எம்.டி.டி.எம்.)**

தௌஹீதை தம் வாழ்வாகக் கொண்ட செய்கு ஒருவரின் முரீதுகள் நிச்சயம் கணத்துக்குக் கணம், நிமிடத்துக்கு நிமிடம், மணிக்கு மணி, நாளுக்கு நாள், வாரத்துக்கு வாரம், மாதத்துக்கு மாதம், வருடத்துக்கு வருடம் தௌஹீதில் உயர்ச்சியடைந்து கொண்டே இருப்பார்கள். இவர்களிற் சிலர் இந்த உயர்ச்சியை உணர்வர். சிலர் உணரார். இது பற்றிய கவலை நமக்கேன்? எல்லாவற்றையும் செய்கின் கையில் விட்டு விடுங்கள். அது போதும். தன்னிலை மாற்றங்களால் இதனை அறிந்து கொள்ள முடியும்.

***– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –***



## கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّنْ لَنَا مَا هِيَ ۚ

“அந்தப் பசு எத்தகையது? என்பதை எங்களுக்குத் தெளிவு படுத்தும்படி நமக்காக நீங்கள் உங்கள் இறைவனிடத்து வேண்டுங்கள்” என்று அவர்கள் கூறினார்கள்.

قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ لَّا فَارِضٌ وَلَا بِكْرٌ عَوَانٌ بَيْنَ ذَٰلِكَ ۖ

(அப்போது) மூஸா அலைஹிஸ்ஸலாம், “அது, முதிர்ந்ததும் அல்லாத இளம் கன்றும் அல்லாத (இவ்விரண்டனுக்கும் மத்தியில் உள்ள) நடுத்தர வயதுடையது என அல்லாஹ் கூறுகின்றான்” என்றார்கள்.

فَافْعَلُوا مَا تُؤْمَرُونَ ٦٨

நீங்கள் பணிக்கப்படுவதைச் செய்துவிடுங்கள்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا لَوْنُهَا ۚ

قَالَ إِنَّهُ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ صَفْرَاءُ فَاقِعٌ لَّوْنُهَا تَسُرُّ النَّاظِرِينَ ٦٩

(அப்போது) மூஸா அலைஹிஸ்ஸலாம் அது காண்போர் களிப்பெய்தத்தக்க அதன் நிறம் பிரகாசமான மஞ்சட் பசுவென அவன் கூறுகிறான் என்றார்கள்.

قَالُوا ادْعُ لَنَا رَبَّكَ يُبَيِّن لَّنَا مَا هِيَ إِنَّ الْبَقَرَ تَشَابَهَ عَلَيْنَا

1. எங்களுக்குச் சந்தேகத்தையுண்டாக்கியுள்ள (அப்) பசு – அது எத்தகையது என்பதை எங்களுக்குத் தெளிவு படுத்தும்படி நமக்காக நீங்கள் உங்கள் இறைவனிடத்து வேண்டுங்கள் என்று சொன்னார்கள்.

2. நமக்கு எல்லாப் பசுக்களும் ஒன்றேபோல் (ஒன்றையொன்று நிகர்த்ததாய்த்) தோற்றுகின்றமையால் அப்பசு எத்தகைத்து என எமக்குத் தெளிவு படுத்தும்படி நமக்காக நீங்கள் உங்கள் இறைவனிடத்து வேண்டுங்கள் என்று சொன்னார்கள்.

وَإِنَّآ إِن شَآءَ ٱللَّهُ لَمُهۡتَدُونَ ٧٠

இறை விரும்பின் நாம் நிச்சயமாக நன்னெறியடைவோம்.

قَالَ إِنَّهُۥ يَقُولُ إِنَّهَا بَقَرَةٌ لَّا ذَلُولٌ تُثِيرُ ٱلۡأَرۡضَ وَلَا تَسۡقِي ٱلۡحَرۡثَ
مُسَلَّمَةٌ لَّا شِيَةَ فِيهَا

பூமியை உழுதோ உழுநிலங்களுக்கு நீர்பாய்ச்சியோ பயிற்றப்படாத ஆரோக்கியமான அதிலே (புள்ளிகள் போன்ற அடையாளக்) கறைகளற்ற பசு அது என அவன் கூறுகிறான்" என்றார்கள்.

قَالُواْ ٱلۡـَٰٔنَ جِئۡتَ بِٱلۡحَقِّ

"இப்போது தான் சரியான (விளக்கத்) தை நீங்கள் கொண்டு வந்தீர்கள்" என்றார்கள்.

فَذَبَحُوهَا وَمَا كَادُواْ يَفۡعَلُونَ ٧١ ع 8

பின்னர், அப்பசுவினைப் பலி கொடுத்தார்கள். அவர்கள் அதை விருப்பமின்றி (ஏமாற்றுமுகமாக) ச் செய்தார்கள்.

---

**(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)**

68.அந்த மாட்டின் வயது என்ன என்று எங்களுக்கு அறிவிக்கும்படி உமது இறைவனைக் கேட்பீராக! என்றார்கள். (அதற்கு மூஸா) நிச்சயமாக அது கிழடும் அல்ல, இளங்கன்றும் அல்ல. மத்தியப் பருவத்திலுள்ள ஒரு மாடு என அவன் கூறுகிறான் எனக் கூறி உங்களுக்கு இடப்பட்ட கட்டளையை நீங்கள் நிறைவேற்றுங்கள் என்றார்.

69. அதற்கவர்கள் அதன் நிறம் என்னவென்று அறிவிக்கும்படி நீர் உமது இறைவனைக் கேட்பீராக! என்றார்கள். (அதற்கு மூஸா) அது பார்ப்பவர் மனதைக் கவரக்கூடிய கலப்பற்ற மஞ்சள் நிறமான மாடு என அவன் கூறுகிறான் என்றார்.

70. அதற்கவர்கள் நிச்சயமாக அம்மாடு (எது என) எங்களுக்குச் சந்தேகமாக இருக்கிறது. அது எது? (வேலை செய்து பழகியதா?) என எங்களுக்கு விவரித்து அறிவிக்கும்படி உமது இறைவனைக் கேட்பீராக. அல்லாஹ் நாடினால் நிச்சயமாக நாங்கள் (இவ்விஷயத்தில்) நேர்வழி பெற்றுவிடுவோம். எனக் கூறினார்கள்.

71. (அதற்கு மூஸா) நிச்சயமாக அது பூமியில் உழவடிப்பதற்கும் பயிருக்குத் தண்ணீர் இறைப்பதற்கும் பயன்படுத்தப்படாத, அதில் அறவே வடுவில்லாத குறையற்ற ஒரு மாடு என்று அவன் கூறனான் என்றார்.(அதற்கு) அவர்கள் இப்பொழுதுதான் நீர் சரியான விவரம் கொண்டு வந்தீர் எனக் கூறிய பின்னும் அவர்கள் அறுக்க மனமின்றியே அதை அறுத்தார்கள்.

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

♦ கலீஃபதுல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா, இலங்கை மாத்தளையைக் சேர்ந்த, அல் **ஹாஜ், அல் உஸ்தாத், நஜ்முல் உலமா, ஆரிஃப்பில்லாஹ், முஹாஜிரீன் ஹக்கிய்யுல் காதிரிய் (நத்வி) ஹழ்ரத் அவர்கள்** இறையடி சேர்ந்துவிட்டார்கள்.

அன்னார் சங்கைக்குரிய வாப்பா நாயகத்தால் வலிய்யுல் அமான் எனும் சிறப்புப் பெயர் சூட்டி கௌரவிக்கப்பட்டவர்களும், வாப்பா நாயகத்தின் உயர் ஆத்மீக நிலைகளை நன்கு புரிந்து கொண்டவரும் அவர்கள் மீது பிடியான அன்பு கொண்டவரும் ஆவார்.

புனித பராஅத் அன்று இறையழைப்பை ஏற்ற, சிறப்புக்குரிய அன்னாரின் மறைவுக்கு சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் உலகளாவிய முரீதுப் பிள்ளைகள் ஆழ்ந்த இரங்கலையும், அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதலையும், கலீபா அவர்கள் மறுமையில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அரவணைப்பிலும் அடைக்கலத்திலும் வாழும் பேறினை அல்லாஹ் அருளவேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றோம்.

♦ சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அன்பு முரீதும், எமனேஸ்வரம் ஆரிப் பில்லாஹ் அப்துல் கரீம் ஹக்கிய்யத்துல் காதிரிய் அவர்களின் தம்பியுமான ஜனாப். ஏ.எம். ஜபருல்லாஹ்கான் அவர்கள் மதுரையில் வபாத்தானார்கள் 27.2.24 புதன் கிழமை காலை 10மணிக்கு மதுரை புதூர் சங்கர் நகர் பள்ளிவாசல் கப்ருஸ்தானில் நல்லடக்கம் நடைபெற்றது. (சங்கைமிகு வாப்பா நாயகம் அவர்களின் திருவடிவம் பொறித்த நாட்காட்டியை தானே தன்னில் தானானான் என்ழ மந்திர வாசகத்துடன் முதன் முதலான தயாரித்தவர்.) சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் அரவணைப்பை அல்லாஹ் அருள்வானாக!

**தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா கலீபாக்கன் முரீதுப்பிள்ளைகள்.**

# திருக்குறள்

**ஆற்றுபவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்**

**போற்று பவர்க்கும் பொருள்.(741)**

பகைவருக்கு அஞ்சாமல் மேற்சென்று போரிட வல்லவர்களுக்கும் அரண் செல்வம். அஞ்சி உள்ளேயிருந்து தம்மைக் காத்துக் கொள்ள நினைப்பவர்க்கும் அரண் செல்வம்.

பெருமானார் கற்றுத்தந்த துஆ:

اَللّٰهُمَّ إِنِّيْ أَعُوْذُ بِكَ مِنَ الْهَمِّ وَالْحُزْنِ وَالْعَجْزِ وَالْكَسَلِ

وَضَلَعَ الدَّيْنِ وَغَلَبَةِ الرِّجَالِ

பொருள் : யா அல்லாஹ்! நான் உன்னிடம் கவலையை விட்டும் துக்கத்தை விட்டும் இயலாமையை விட்டும் சோம்பலை விட்டும் கோழைத் தனம், கருமித்தனம், கடன் சுமையை விட்டும் மக்கள் என்னை அமுக்கி வைப்பதை விட்டும் பாதுகாவல் தேடுகிறேன்.

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**பிறை**

**7 ரஜப்**

1. ஹஸன் பஸரீ (ரஹ்) மறைவு
   கல்வத்து நாயகம் (ரஹ்) பிறப்பு

4 இமாம் ஷாபிஈ (ரஹ்) மறைவு

5 மாப்பிள்ளை லெப்பை ஆலிம் (ரஹ்) மறைவு

6 க்வாஜா முஈனுத்தீன் சிஷ்தி (ரலி) மறைவு

14 தக்கலை பீர் அப்பா (ரலி) கந்தூரி

15 இமாம் ஜஃபர் ஸாதிக் (ரலி) ஷஹீது
மதுக்கூர் ஷைகு ஃபரீத் வலீ (ரஹ்) கந்தூரி

27 புனித மிஃராஜ் இரவு

**பிறை**

**8 ஷஃபான்**

2 இமாம் அபூஹனீஃபா மறைவு

5 இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) உதயம்

15 புனித ஷபே பராஅத்

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



*கவனம்.... கவனம்....*

**எம்**முடைய முரீத் முரீதாக இருக்க வேண்டும் என்பதனை விரும்புகிறோம். முரீத் முறியக்கூடாது. அப்படி முறியக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டானால் ஆபத்துதான்.

எனவே, அனைவரும் கவனமாக நடந்து வாருங்கள். பாபங்களில் ஈடுபடக்கூடாது. அல்லாஹ் உங்களைக் காப்பானாக.

பர்ளானவைகளைக் கட்டாயம் செய்து வர வேண்டும். “களா”வாகலாம். அவ்வாறு ஏற்பட்டால், அவற்றைத் திரும்பச் செய்து கொள்ளலாம். முடியுமான அளவு சுன்னத்தான அமல்களைச் செய்து வாருங்கள். சுன்னத்தான அமல்களை அல்லாஹ்வோ பெருமானார் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களோ வற்புறுத்த வில்லை. எனவே, நாமும் வற்புறுத்திக் கூறவியலாது.

**ஹ**க்கின் தியாகியே, ஹக்கான எமது தியாகியே, அருமை மஹ்பூபே, நீங்கள் பற்றியிருக்கும் இக்கயிறு மிகப் பலமானது. இதில் வளைவு இல்லை. நேர்மையானது. ஸிராத்துல் முஸ்தகீம் இதுவேயாகும். பரிசுத்த இந்தச் சந்நிதானத்தில் பெருமிடம் பெற்றுள்ளீர்கள். இன்றைய முஹம்மதும், அஹ்மதும், மஹ்மூதும், அஹதும் நாமே. எதற்கும் அஞ்சாதீர்கள். எமது சுடர் உங்கள் கண்களில் என்றுமே வீசிக் கொண்டிருக்கும். ஹக்காக நாமிருக்க ஹக்கையே நீங்கள் பற்றியுள்ளீர்கள். சென்றவர்களை எம்மில் காணுங்கள். வருபவர்களும் நாமேயாவார்கள். இக்காலத்தை, மக்களை இரட்சிக்கவே எம்மைச் சிறுபிராயம் தொட்டே ஹக்கின் மடியில் வளர்த்து வந்தது.

*(கலீபா அப்துல் கறீம் அவர்களுக்கு அருளிய பட்டோலையிலிருந்து.....)*

# அமுத மொழிகள்

**மனிதனே!**

உன் இனம் மிருக இனம் என்பதை உணர்ந்து கொள். அப்போது உன் தற்பெருமை, பொறாமை, அகந்தை, பேராசை, மமதையெல்லாம் அற்றுப் போகும். நீ உண்மையிலேயே மிருகம்தான். அப்படித்தான் தத்துவார்த்த வாதிகள் கூறுகின்றனர்.

ஆனால், இறைவன் உனக்கு ஒரு பெரும் உதவியைச் செய்திருக்கிறான். அது என்ன? எனச் சிந்தித்துப் பார். அதுதான் சிந்தனை. இது மிகப்பெரும் செல்வமாகும். ஒரு மிருகத்திற்கும் முன்னங்கால்களான இரண்டு கைகளும் இரு கால்களும் உள்ளன.

நீ நிமிர்ந்து நடக்கிறாய். அதனால்தான் நீ கர்வத்தை விலைக்கு வாங்கிக் கொண்டாயோ? அதனால் உனக்குத் தந்த செல்வத்தையும் இழந்துவிட்டாய்.

மேலும் நீ மயங்கிப் போனாய். கண்ணிருந்தும் உன்னால் பார்க்க முடியவில்லை. மூளையிருந்தும் உன்னால் சிந்திக்க முடியவில்லை. நீ சிந்திக்கிறதாக நினைத்துக் கொள்கிறாய். அந்தச் சிந்தனை எங்கெங்கோ வெல்லாம் சென்று அழிவை உண்டு பண்ணுகிறது.

விஞ்ஞானியின் சிந்தனையால் உலகமே அழிய இடமுண்டு. உன் சிந்தனை உண்மைக்கு முரணாக இருப்பதால்தான் நீயும் உன் குடும்பமும் அழிய வழிவகுக்கிறாய். உன் மானிட சிந்தனையுடன் உன் தூய சிந்தனையை சிறிது நேரமாவது வைத்துக்கொள். அது உன் தீய சிந்தனையிலிருந்து உன்னைத் திசை திருப்பி நேர்வழிக்குக் கொண்டு வந்துவிடும்.

தூய சிந்தனையென்பது எது? அதில் கபடம் இல்லை. குபாடம் இல்லை. பாபம் இல்லை. களவு, சூது இல்லை.

அது; ஒன்றையே சிந்திப்பதாகும், மாய சிந்தனை மனிதனை ஆதிநிலையை அறியவிடாது மயக்கி விடுகிறது.

இந்த மாயச் சிந்தனையால் எல்லாவற்றையும் அறிந்து பேரறிஞன் எனும் பெயர் நீ பெற்றாலும் நீ ஒரு பதர் என்பதை உணர்ந்துகொள். அதனால் மிருகத்தைவிடக் கேடு கெட்டவனாகிறாய். மிருகமோ அது தன்னையே அறியாது தன்னிலே இயங்கிக் கொண்டிருக்கிறது.இந்த இயக்கமே அதன் பெரு வணக்கமாகும். எனவே, மனிதனே, உனது வீணான சிந்தனையைவிட்டு,

உன்னை நீ சிந்திக்களத்தனி. அது உன்னை மாய இருளிலிருந்து நீக்கி ஒளியளவில் உன்னைக் கொண்டு வந்து சேர்த்துவிடும்.

மனிதனே! உன்னை நீ அறிந்துகொள். பின்னால் உன்னை அறிந்தபடி மறந்துவிடு. மிருகம் தன்னையே அறியாதிருக்கிறது.

உன் தூய சிந்தனையால் நீயுன்னை அறிகிறாய். அறிந்தபின் நீ உன்னை மறந்து விடுகிறாய். அப்போதுதான் உனக்கும் மிருகத்துக்கும் உள்ள வேறுபாட்டை அறிகிறாய்.

மனிதனே, நீ சும்மா சாப்பிடும், பேசும், தொழிற்செய்யும் மிருகமாக மட்டும் இருந்துவிடாதே. சற்று உன்னைச் சூழ உள்ளவற்றைப் பார்.

வானம், பூமி, நெருப்பு, காற்று, நீர், கொடிகள், செடிகள், மரங்கள், மலை, ஆறு, குளங்கள், உன்னைச் சூழ உள்ள பெருங்கடல், அருவி, சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள் இவைகள் என்ன செய்கின்றன என்றெல்லாம் சிந்தித்துப் பார்.

இரவு பகல்களும் உனக்கு உணர்வூட்டக் கூடியன. அவற்றுடனேயே நீ இருக்கிறாய். ஆனால், அவற்றை நீ மறந்து விடுகிறாய். பறவைகள் முதலானவைகளும் உனக்குப் பல புத்திகள் புகட்டுகின்றன.

ஆனால், நீயோ பெரும் புத்திக்காரனாய் உன்னைக் கருதிக் கொண்டு அதை கிஞ்சிற்றும் கேட்கின்றாயில்லை. பார்க்கின்றாயில்லை. நீயே புத்தி கெட்டவன். உன்னை யாரால் தான் திருத்த முடியும்? உன்னால் எவரைத்தான் திருத்த முடியும். முடிவு இழிவும் அழிவுமே.

**மனிதனே!**

நீ உண்மையை உணர்ந்து கொள். நீ உண்மையிலிருந்தல்லவா வெளியானாய். ஆதலால், உன் உடலுக்கு மெய்யென ஒரு பெயரும் உள்ளதல்லவா?

நீ உண்மையிலிருந்து வெளியானதும் நீ உன்னைப் பொய்யென நினைத்துப் பொய்யான உலக வாழ்வில் மருண்டுவிட்டாய். திரும்பவும் நீ உன்னை நினைத்துப் பார். அப்போது உன்னை நீ யாரென அறியக் கடவாய்.

# உமர் ரலி புராணம்

**நிழற்றரு மரங்க ளில்லை**
**நெடும்பெருஞ் சோலை யில்லை**
**எழிற்றரு மூற்று மில்லை**
**ஈரநன் னிலமு மில்லை**
**அழகுதோய் பூக்க ளில்லை**
**அருந்துகாய் கனிக ளில்லை**
**பொழுதுபோய் வருவ தல்லால்**
**புரிந்தது மொன்றி லையே.**

**பொருள் :**

அப்பாலையின் கண்ணே நிழல் கொடுக்கும் மரங்களில்லை. நீண்ட பெரிய மரச் சோலைகளில்லை. எழிற்றரும் நீரூற்றுமில்லை. அதனால் நனைந்த நிலமும் இல்லை. நனைந்து நீர் வளம் பெறாததனால் எழிற் றோய்ந்த பூக்களூ மில்லை. உண்ணத் தக்க அருமையான கனிகாய் வகைகளும் அந்தப் பாலையிலில்லை. (அங்கே மக்கள் என் செய்கின் றனர்?) சூரியன் உதித்து மறைவதன்றி (அவர்கள்) புரிந்த வினை யொன்றுமே யில்லை.

கண்ணுக் கெட்டிய தூரம் வெறுமையாகக் காட்சிதரும் அப்பாலை வனத்தில் மற்ற நிலங்களில் இருக்கக்கூடிய சிறப்புகள் எதுவுமே இல்லை என்பதை இப்பாடல் எளிதாக நயமாக விபரிக்கிறது.

வாழ்வில் எந்தச் சாதனையும் செய்யாத மனிதனின் வாழ்வில் சூரியன் காலையில் உதித்து மாலையில் மறைந்து போவதைத்தவிர வேறு எந்த நிகழ்வும் நடவாததைப்போல, அந்தப் பாலை வனத்தில் வீணே விடிந்து வீணே நாள் முடிவதே வழக்கமாக இருக்கிறது. அதனால் யாருக்கும் எந்தப் பயனும்இல்லை. அந்த நிலத்தாலும் பயனில்லை, அங்கு வாழும் மக்களாலும் பயனில்லை.

*(வேறு)*

**பற்றை முட்க ளுண்டு**
**பாயு மரவு முண்டு**
**குற்று முட்க ளுண்டு**
**கூர்த்த வறல்க ளுண்டு**
**பற்றுங் காலு முண்டு**
**பரக்குந் துகளு முண்டு**
**வற்ற னிலமு முண்டு**
**வற்று வாழ்வு முண்டே.**

## பொருள் :

பாலைப் பற்றைகளில் முட்களுண்டு. பாய்ந்தோடும் பாம்புண்டு. காலை வெட்டும் முட்களுண்டு. கூர்மையான மணல் உண்டு. தொடர்ந்து வீசுங் காற்றுமுண்டு. அதனால் உயர்ந்து பறக்கும் தூசுமுண்டு. உலர்ந்த நில முண்டு. அவ்வாறு மக்களின் பயனற்றுப் போன வாழ்வும் உண்டு.

## குறிப்பு:

பற்றை: மணலைப் பற்றிவளரும் செடிகளின் முட்கள். அரவு, அரவம்: பாம்பு. குற்றல்: வெட்டல். கூர்ந்த: கூர்மையான. அறல்: கருமணல். பற்று: தொடர்ந்து வீசும். கால்: காற்று. துகள்: தூசி. வற்றல்: உலர்தல். வற்று: வற்றிய, பயனற்றுப்போன.

முந்திய பாடலில் வரிசையாக இல்லை இல்லை யென தொடர்ந்து கூறப்பட்டது.

இப்பாடலில் அங்கு எவையெல்லாம் உண்டு என வரிசையாகக் கூறப்படுகிறது.

ஆனால் இவையெல்லாம் இருப்பதால் என்ன பயன்? ஒரு பயனும் இல்லை. பொருள்களைக் கூறி அத்தோடு மக்களின் பயனற்றுப் போன வாழ்வும் உண்டு எனப் பாடுவது அருமை. புதுமை.

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## பிரசங்கமும் உபதேசமும்

இவ்விரண்டும் நல்லனவற்றை ஏவி இடறை விலக்குகின்றன. எனினும், பிரசங்கம் பெரும் கூட்டத்திடத்தே பொதுவாக நிகழ்த்தப்படுகிறது. உபதேசமும், குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்டவர்க ளுக்கு அல்லது மரண தறுவாயில் கூறும் மரண உபதேசம் போன்றது.

உரைநடை, மிக்க அலங்காரமின்றிச் சமய சந்தர்ப்பங்களுக் கேற்ப மேலெழுந்த வாரியான சிந்தனையுடன் இயற்கையாய் மனிதன் பேசும் வாயுரை போன்றது.

சொற்பொழிவு, (பிரசங்கம்) சிந்தனை, சொல் வளம், நாவன்மை, வீரம், சுதந்திரம், சிறப்பு ஆகியன நிறைந்தது. குடும்பச் சிறப்பைப் பாதுகாத்தல், ஒற்றுமை யுண்டாக்கல், அரசர்கள் மத்தியில் தூது செல்லல் முதலானவை சொற்பொழிவாளர்களின் பிரதான தொழில்களாயின. உயர்ந்த இடத்திலிருந்து அல்லது வாகனம் மீதிருந்து கைச்சைக்கினையுடன் ஊன்றுகோல், ஈட்டி, வாள் முதலானவற்றைப் பற்றி நின்றுகொண்டு சொற்பொழிவாற்றுவர்.

சொற்பொழிவாளர்கள் அழகிய தோற்றம், இனிய ஒலி, மன உறுதி ஆகிய இலட்சணங்களுடையோரா யிருந்தனர். இவர்களுள்

(قيس ابن ساعدة الإيادي)

கைஸுப்னு ஸாஇததுல் இயாதீ என்ற பாதிரியார்,

(عَمروابن معديكرب الزُّبَيْدي) அம்ருப்னு மஉதீ கரிபிஸ் ஸுபைதீ என்ற ஸஹாபீ முதலானோரைச் சிறந்தவர்கள் எனக் கூறலாம். மேலும் விரிவஞ்சி இதன் விவரத்தை விடுத்தோம்.

## செய்யுள்

நூதன எண்ணங்களாலும் நாவன்மைமிக்கச் சொற்பிரயோகங் களாலும் யாப்பிலக்கண முறைப்படி ஆக்கப்பட்டதே செய்யுளாகும். இது வசன முறைப்படியும் இருக்கும். இவ்வித வசன முறையை ஹிப்ரூ, கிரேக்க, பிரெஞ்சு அறிஞர்கள் செய்யுளெனக் கூறுவர். உணர்ச்சியும் இயற்கையும் இதன் அடிப்படையாதலால் இலக்கிய அடிப்படையில் செய்யுளே முந்தியது.

வசனம் செய்யுளாயும் செய்யுள் சங்கீதமாயும் வளர்ந்ததெனப் புலவர்கள் கூறுகின்றனர்.

குறிபார்க்கும் கிரேக்கர்களும் அறபிகளும் பண்டையப் புலவர்களே. இவர்கள் பாட்டுவடிவிற் குறி சொன்னார்கள். அப்பாட்டின் சந்தம் புறாக் கூவுதல் போன்றிருந்ததால் அதற்கு (“ (سجع) ”) ஸஜஉ என்று பெயர் வைத்தனர். புறாக் கூவுதலுக்கு அறபியில் ஸஜஉ என்பர். பின்னர், இச்சந்தம், வீரத்திற்கொரு சந்தமெனவும், காதலுக்கொரு சந்தமெனவும், விகடத்திற்கொரு சந்தமெனவும் பிரிவு கொண்டது. கலீல் பின் அஹ்மத் என்றவர் இதனைப் பதினைந்து பிரிவுகளாக மட்டிட்டார். இவைகளுக்கு அவர் “ (بحر) (بحور) ” பஹ்ர் என்று பெயர் வைத்தார்.

இயற்கையிலே ஸாமியர்களில் அறபிகள் மிகச் சிறந்த புலவர்கள். அவர்களின் நாடும் வாழ்வும் அவர்களை அவ்வாறு ஆக்கின. உலகிலேயே காதற் பாட்டுகள் அவர்களிடம் தான் அதிகமுண்டு. மனிதனை வழிகெடுக்கவும் சன்மார்க்கனாக்கவும் புலவர்களுக்கு வல்லமையிருந்தது.

**(இலக்கியம் விரியும்)**

# தேடுகிறேன் தேடுகிறேன் திருமுகம் எங்கே?

கலீபா . ஆலிம் புலவர். எஸ்.ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ.

மெட்டு : நீ இல்லாத உலகத்திலே நிம்மதி இல்லை . படம்– தெய்வத்தின் தெய்வம்

நிலவில்லாத வானத்திலே ஓரழகில்லை – எம்
ஷைகில்லாத வெலிகமையில் பேரழகில்லை பேரொளியில்லை!
தேடுகிறேன் தேடுகிறேன் திருமுகம் எங்கே? – எனை
மீண்டும் மீண்டும் பார்க்கச் சொல்லும் புன்னகை எங்கே?

(நிலவில்லாத)

கண்ணருகே பார்த்த காலம் எங்கு போனது? – இரு
கை கொடுத்து மகிழ்ந்த பாசம் என்னவானது?
ஊடுருவும் பார்வையிலே உயிர் பிழைத்தது– எங்கள்
உள்ளமென்னும் மாளிகையின் விளக்கணைந்தது விளக்கணைந்தது!

(நிலவில்லாத)

ஒரு நாளில் வாழ்க்கை முழுதும் கொள்ளை போகுமா? –என்
ஒருவனுக்கு மட்டுமல்ல அனைவருக்குமா?
பிள்ளை எம்மைப் பிரிந்து செல்ல மனம் துணிந்ததா –எம்
பிள்ளை பேரர் பங்குகளைக் கொண்டு சென்றதா?

(நிலவில்லாத)

கல்வி கேள்வி ஞானம் எல்லாம் யார் கொடுத்தது?– யாம்
பெற்ற செல்வம் வீடு வாசல் எவர் கொடுத்தது?
ஞானிகளின் வரிசையிலே இடம் கிடைத்தது– யாம்
ஏழையல்ல செல்வர் என்றே யார் உரைத்தது யார் உரைத்தது?

(நிலவில்லாத)

பைஅத் என்னும் சங்கிலியில் யார் இணைத்தது? –உயர்
பெருமைமிகு முரீது என்றே பெயர் கொடுத்தது?
இரண்டு எனும் பார்வைதனை யார் உடைத்தது?– நாம்
இறைவனோடு கலந்திருக்கும் வாழ்க்கை தந்தது வாழ்க்கை தந்தது?

(நிலவில்லாத)

அர்ஷின் நிழல் அனுபவங்கள் அடைகின்றீர்களா? -நம்
அண்ணல் நபி தரிசனத்தில் மூழ்கினீர்களா?
ஜமாலிய்யா யாஸீன் ரலி அரவணைப்பிலா? - அங்கே
நித்ய ஜீவ பானம் உண்டே பருகினீர்களா? பருகினீர்னளா?
(நிலவில்லாத)

யாஸீன் ரலி நாயகத்தில் மரபு போலவா?-பேரர்
யாஸீன் அலி நாயகத்தை தந்த மாதவா
ஏகத்துவ ஞானசபை என்றும் தொடரவே -நம்
ஹக்கிய்யத்துல் காதிரிய்யா என்றும் வளரவே என்றும் வாழவே!
(நிலவில்லாத)

---

## சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் நினைவேந்தல் விழாக்கள்!

14.1.24. ஞாயிறு அன்று ஈரோடு கே.எஸ்.நகர்.பொறியாளர் ஆரிப் அவர்கள் வீட்டில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் நினைவேந்தல் மாலை 4 மணிமுதல் இரவு 7 மணிவரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. யாஸீனிய் பேரவைத் தலைவர் கலீல் யாஸீனிய் தொடங்கிவைக்க, ஆரிப் அவர்கள் ஒருங்கிணைப் பாளராக செயல்பட்டார். காதர், ஷரீப் அகமது, மேட்டூர் சாகுல், யூ.ஏ.ஹெச். ஜாபர், மதீஹ், மன்ஸூர் மற்றும் நாசர் அவர்கள் சீரிய முறையில் உரையாற்றினர்.

ஆரிப் அவர்கள் வெலிகமையில் நாயகத்தின் அருகில் அதிகாலை இருந்தபோது ஈரோடு ஹாஜி. கலீபா. அப்துல் ஜப்பார் அவர்களைப் பற்றி நாயகம் அவர்கள் நினைவு கூர்ந்ததையும், அச்சமயத்திலேயே ஈரோட்டிலிருந்து தகவல் அன்னாரது மறைவு பற்றி செய்தி வந்த கராமத்தையும், மிகஉருக்கமாகப் பேசினார். மதீஹ் அவர்கள் பேசும்போது கட்டுப்படுத்த முடியாமல் அழுதுவிட்டார். இறுதியுரையாக கலீல் யாஸீனிய் அற்புதமாகப் பேசினார். இதில் அதிகமான தமிழ் பக்தர்கள், முஹிப்பீன்கள், அஹ்பாபுகள், மற்றும் பொதுமக்கள், பெண்கள் கலந்து கெண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர். (தகவல்- பஷீர் அகமது ஹக்கிய்யுல் காதிரிய்)

ஈரோட்டைப் போலவே பெரம்பலூர், மதுக்கூர், திண்டுக்கல்,சென்னை, துபை, குவைத் ஆகிய சபைகளிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெற்றன.

# இலங்கை வெலிகமையில் சங்கைமிகு செய்கு நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் 40 ஆம் ஃபாத்திஹா – நினைவேந்தல் நிகழ்வு!



## மௌலிது ஷரீப் மஜ்லிஸ்.

சங்கைமிகு செய்கு நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் 40 ஆம் ஃபாத்திஹா - நினைவேந்தல் நிகழ்வு வெலிகமை 52. புஹாரீ மஸ்ஜித் மாவத்தை பைத்துல் பரகாஹ் திருஇல்லத்தில்10.02.2024 சனிக்கிழமை மாலைமுதல் 11.02.2024 ஞாயிற்றுக் கிழமை மன உருக்கத்துடன் நடைபெற்றது.

சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் அலி மௌலானா அல் ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் தலைமையில், சங்கைமிகு, ஜமாலிய்யா அஸ்ஸையித் ஸாஜித் அலி மௌலானா, ஜமாலிய்யா அஸ்ஸையித் வாரிஸ் அலி மௌலானா, ஜமாலிய்யா அஸ்ஸையித் ஜாஹித் அலி மௌலானா, மற்றும் திருக்குடும்பத்தார் முன்னிலைவகிக்க, முதல் அமர்வாக சனிக்கிழமை மக்ரிபுக்குப்பின் குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா நாயகம் (ரலி) அவர்கள் மீது குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்கள் இயற்றிய அஸ்ஸையித் யாஸீன் மௌலானா –ரலி– மௌலிது ஷரீப் ஓதப்பட்டு. பின்னர் ரஸூல் மாலையும் ஓதப்பட்டது.

**இரண்டாம் அமர்வாக 11.02.2024 ஞாயிற்றுக் கிழமை காலை கத்முல் குர்ஆன் தமாம் செய்யப்பட்டு– ஸுப்ஹான மௌலிது – கஸீதத்துல் அஹ்மதிய்யா ஓதப்பட்டது.**

**பின்னர் ஹாபிழ். அபுத்தலாயில். எம். ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹழ்ரத், காப்பியக்கோ ஜின்னா ஷர்புத்தீன் இரங்கலுரை நிகழ்த்தினர். கலீபா. ஆலிம் புலவர் எஸ்.ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பயீ தேடுகிறேன்..தேடுகிறேன்.. திரு முகம் எங்கே? என்ற பாடல் இசைத்து அனைவரையும் கண்ணீர் கசியவைத்தார்.**

**கலீபா. ஜனாப். எம்.ஜே. முஹம்மது இக்பால் பி.இ.எம்.பி.ஏ. அவர்கள் முயற்சியில் வெளியிட்ட 40 ஆம் நாள் ஞாபகார்த்த நினைவுமலர் அனைவருக்கும் வழங்கப்பட்டு தப்ரூக்கும் நல்விருந்தும் அளிக்கப்பட்டது.**

**இப்புனித நிகழ்வில், இலங்கை, இந்தியா, துபை, குவைத், கத்தார், சிங்கப்பூர், மலேசியா,லண்டன், முரீதுகள் கலந்து சிறப்பித்தனர்.**

**சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் இல்லத்தில் அவர்களின்றி ஒரு நிகழ்வில் கலந்து கொண்ட ஏக்கத்தில், கனத்த இதயத்துடன் கண்களில் கண்ணீர் தழும்ப முரீதுகள் அவரவர் தாயகம் திரும்பினர்.**

---

உள்ளம் பால்போல் இருக்க வேண்டும்; உள்ளம் கண்ணாடி போல் இருக்க வேண்டும் எனச் சொல்வார்கள். அவ்வாறிருந்தாலே... அல்லாஹ்வை அறியக்கூடிய அறிவு உள்ளத்தில் ஏற்பட வாய்ப்புண்டாகும்!

அவ்வாறில்லாமல்.... உள்ளத்தில் பற்பல எண்ணங்களை வைத்துக் கொண்டும் – அல்லாஹ்விற்குப் பொருத்தமில்லாத விஷயங்களை வைத்துக் கொண்டும் – அல்லாஹ்விற்குப் பொருத்தமில்லாதவற்றை பொருத்தமானவை என நினைத்துக் கொண்டுமிருப்பதால் எந்தப் பிரயோசனமும் உண்டாகப் போவதில்லை!

எனவே, நல்ல நிலைகளடைய வேண்டும் என்பதற்காகவே அல்லாஹ்வைப் பற்றிய அறிவு – அல்லாஹ் ஏகன் என்னும் அறிவு அவசியம் எனக் கூறுகிறோம்!

அல்லாஹ்வைப் பரிபூரணமாக்ஷக அறியாமற்போனால்" ஷிர்கு"டைய நிலைதான் (இணைவைத்தல்) ஏற்படும்!

***– சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் –***

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மறைவுக்கு வருந்தி

எகிப்து அறிஞர் அஷ்ஷைகு அஹ்மது ஃபரீதுல் மஜீதீ அவர்கள் இம்தாதுல்லாஹ் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் மூலம் அனுப்பிய இரங்கற் செய்தி.

بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

## رثاء من الشيخ أحمد فريد المزيدي

### عميد التحقيق للتراث الصوفي ومن علماء الأزهر الشريف

إنه قد أحزنني انتقال الشيخ جمالية قبل أن نلتقي في «بلقام» على موعدٍ اختلف وقته، وحالت الأقدار دون تحقيق بغيته - احتفالاً بكتابنا «مشكاة الأولياء شرح يوانع أثمار النعماء» للعارف بالله ياسين مولانا، والذي قدَّم له الشيخ خليل عون المتصرف بأنوار الفتوة والولاية، وأسرار النبوة والرسالة، المُفصح عن أسرار الحقائق بين الأولياء، السيد الشريف الجليل المعمَّر القطب الغوث الجامع الوارث الربَّاني، صاحب الإشارات والمعاني، الناطق بالأسرار الإلهية، والنفثات الروعية، ذو الهِمَم العَرشية، والعزائم المحمدية، والحقائق القدسية، والمنازلات الأُنسية، والقرابات العَلوية، والتجليات السَّنية، الرافع في وقته ألوية الولايات، والمقيم على سرير دولة المكاشفات، المبرز بألفاظه علوم المحققين، والمفصح بحاله أحوال السالكين، كهف قلوب المساكين، وقبلة همم المريدين، المحيي لمعالم الطريقة بعد خفاء آثارها، والمبدي كنوز الحقيقة بعد خبو أنوارها،

لمعالم الطريقة بعد خفاء آثارها، والمبدي كنوز الحقيقة بعد خبو أنوارها، والدَّال على الله وحُبِّه، والداعي إلى حضرته وقُربه، إمام أهل الوحدة بدعوته وطريقته، حواري الأوتاد، وزين الأقطاب وجامعها، وشمس طريقة الأولياء، ومسلك الأصفياء وسيدها، الحبيب النسيب، المقرب الكريم الحسيب، فرد أفراد الرجال، في علوم الأحوال، الواحد في لقبه بين الأولياء من بني الحُسينين، العَلم في الشهرة بين الآل من العصابة العَلويين، الأستاذ الكامل، المربِّي الواصل الشريف جمالية، السيد خليل عون مولانا الحَسني الحُسيني الهَاشمي ﷺ أجمعين.

أو ما ترى الشجعان كيف سلوكهم    في الكون أشباحا وهي تجول
فلا تحسبنَّ الموت يُوهن جاههم    أو حالهم فهم الكرام فُحُول
فهو غوث للبلاد جميعها جمَالية    وطريق يُسمَّى حقانية خليل

---

ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாகத் தெரிவிக்கிறார்கள்:

'உங்களால் முடிந்த அளவே சக்திக்கேற்ப அமல் செய்யுங்கள், ஏனெனில் அல்லாஹ் சோர்வடைவதில்லை. ஆனால், நீங்களோ சோர்வடைந்து விடுவீர்கள்' (புகாரி)

"முஃமின் தன்னைக் கேவலப்படுத்திக் கெள்வது நல்லதல்ல!" என அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளிய போது "முஃமின் தன்னைத் தானே கேவலப்படுத்திக் கொள்வானா?" என மக்கள் வியந்து கேட்க, அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெரிவித்தார்கள்: "தன்னைத் தானே தாங்க இயலா, சோதனைக்குள்ளாக்கிக் கொள்கிறான்" இதுவே தன்னை கேவலப்படுத்திக் கொள்வது. (திர்மதி)

## *இறை நேசர்களின் தலைவர். கௌதுல் அஉளம்*

# முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி (ரலி)

அவதரித்தநாள்: கிபி1078-ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் தேதி ஹிஜ்ரி 71 ஆம் ஆண்டு ரமலான் பிறை முதல் நாள் திங்கள்ட்கிழமை அதிகாலை.

அவதரித்த இடம்: காஸ்பியன் கடலுக்குத் தெற்கே பாரசீகமொழி வழங்கிய தபரிஸ்தான் மாநிலத்தில் ஜீலான் எனும் புனித நகரின் புறநகர்ப்பகுதியான நீஃப் என்ற திருத்தலம்.

குர்ஆன் முழுவதையும் மனப்பாடம் செய்துமுடித்த போது வயது 7.

உயர்கல்விக்காக ஜீலான் நகரை விட்டு பக்தாத் மாநகருக்குப் புறப்பட்ட போது வயது 18.

பகுதாது மாநகரில் ஏழு ஆண்டு காலக் கல்வியை முடித்த போது வயது 25.

ஆன்மிக சாதனைகள் பக்தாத் நகரையடுத்திருந்த காடுகளில் 11 ஆண்டுகாலமும், கானகத்தின் மத்தியில் இருந்த புருஜுல் அஜமி கோட்டையில் 11 ஆண்டு காலமும், ஆக 22 ஆண்டு காலம் கடினமான தவயோக சாதனைகளைப் புரிந்தார்கள்.

கால வெள்ளத்தின் அலைக்கழிப்பால் கம்பீரம் குறைந்து நலிவுற்றிருந்த தீன் எனும் ஆன்மிக ஞான மார்க்கத்திற்கு புத்துயிர் ஊட்டிதீனுக்கு உயிரூட்டிய முஹிய்யுத்தீன் எனும் காரணத் திருநாமத்தை அடைந்த போது வயது 50.

40 ஆண்டுகால நெடும்நோன்பையும், 22 ஆண்டு கால கடும் தவத்தையும் 50 ஆவது வயதில் முடித்து கிபி 1127 ஆம் ஆண்டு (ஹிஜ்ரி 21) தன்னையறிந்து தலைமை நிலைக்கு மீண்டு, பூரணத்துவத்தின் பொலிவுடன் உலகியல் பக்கம் திரும்பியபோது வயது 51

கதமீ ஹாதிஹி அலாரகபாத்தி குல்லிவலியுல்லாஹ்.-என் இரு பாதங்கள் இறை தோழர்கள் (வலிமார்கள்) அனைவர் தோள்கள் மீதும் இருக்கின்றது.

என்று முஹிய்யுத்தீன் பெருமான் பிரகடனப்படுத்தியது ஹிஜ்ரி 61 கிபி 1169 ஆம் ஆண்டு.

**இத்தகு சிறப்புப் பெற்ற வரலாற்று நாயகர் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்கள் நமது தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் மூல நாயகர் ஆவார்கள்.**

அவர்களின் திருமரபில் தோன்றிய ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களைத் தங்களின் ஞான வாரிதாத்தாகிய கலிமாவிருட்சக் கனிந்த கனி எனும் நூலில் இவ்வாறு கூறுகிறார்கள்.

■ திருமுல்லைவாசல், மேலப்பள்ளி வாசலிலே ஹிஜ்ரா 1358 ஜமாதுல் அவ்வல் பிறை 2, திங்கட்கிழமை மக்ரிபுக்கும் இஷாவுக்குமிடையில் எனது பாட்டனார் மஹ்பூப் ஸுப்ஹானி (ரலி) அவர்களின் பிரசன்னத்தைப் பெற்றேன். துஹ்பத்துஸ் ஸூபிய்யா, ரிஸாலதுல் கௌதிய்யா, என்ற பெயர்களுடைய அவர்களின் அரிய இரு கிரந்தங்களை எனக்குக் கொடுத்து நானும் என்னைத் துயர்கிறவர்களும் அவற்றைக் கொண்டு பிரயோசனம் பெறும்படிக் கூறினார்கள். அல்லாஹ் அவர்களைப் பொருந்துவானாக. எல்லாப்புகழும் அல்லாஹ்வுக்குரியன.

■ திருச்சியில் எனது நண்பர், மர்ஹூம் அல்ஹாஜ். ஸூபி, நெய்னா முஹம்மது சாஹிப் அவர்கள் வீட்டிலே ஹிஜ்ரா 1358, ஜமாதுல் ஆகிர், பிறை 20, செவ்வாய்க்கிழமை காலை எனது மனாமில், நான், உலமாக்கள், ஸூபியாக்களுடைய கூட்டத்திலே, உபதேச சபையிலே, என்னைத் துயரும்படியும், என்னைப் பிரியம் வைக்கும்படியும் உபதேசித்துக் கொண்டிருந்தேன். அப்பொழுது எனது பாட்டனார், மஹ்பூப் ஸுப்ஹானி (றலி) அவர்கள் பிரசன்னமாகி, ஒவ்வொரு அறபி மாதமும் 14ஆம் இரவிலே, திக்ரு உபதேசத்திற்குரிய சபையை எனது சக்திக்குத் தக்கபடி நடத்துமாறு சொல்லி, செல்வங்கள், நலன்கள், சிலது கொண்டு எனக்கு நற்சொற் கூறினார்கள். அல்லாஹ் அவர்கள் இரகசியத்தைப் பரிசுத்தப்படுத்தி அவர்கள் ஆத்மாவைச் சிறப்பிப்பானாக. அவனின் திருவருள் மீது எல்லாப் புகழும் அவனுக்கே உரியது.

குறிப்பு: தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவில் சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையிது கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் முரீதுகளாகிய நாம், பிறை 14 இல் ஓதும் ராதிபு ஹள்ரத் கௌதுல் அஉளம் முஹுய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் அன்புக் கட்டளையால் உருப் பெற்றது என்பதை அறிந்து மகிழ்ந்து மாதந்தோறும் தவறாமல் ராதிபு சபைகளில் பங்கேற்று சங்கைமிகு நாயகர்களின் பேரருளைப் பெறுவோமாக!

## *சுவனத்திப் பெண்களின் தலைவி.*

# அன்னை ஃபாத்திமா நாயகி (ரலி)

எனது ஈரக் கொழுந்து என்று கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் சிறப்பித்துக் கூறப்பட்டவரும் அவர்களின் இளைய புதல்வியுமான பாத்திமா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் அன்று வாழ்ந்த வாழ்க்கையை இன்று கொஞ்சம் நினைத்துப் பாருங்கள்.

சகோதரிகளே மனம் உருகுகிறது அல்லவா?

நுபுவ்வத் 10 ஆம் ஆண்டு அன்னை கதீஜாவை இழந்தார்கள் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்கள். மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற போது தனது மகளை, ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மணம் முடித்து வைத்தார்கள். அப்போது பாத்திமா நாயகியார் அவர்களுக்கு வயது பதினெட்டு. ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களுக்கு இருபத்தி மூன்று வயதாகும். மிகவும் எளிமையான முறையில் ஹிஜ்ரி – 2 ஆம் ஆண்டு இவர்களின் திருமணம் நடந்தது.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களது மகளாருக்கு மரக் கட்டில், தலையணை, போர்வை, திரிகை, நீர் சேகரிப்பதற்கான பாத்திரம் போன்ற பொருட்களை அன்பளிப்புச் செய்தார்கள். பாத்திமா நாயகியார் அவர்கள் தமது வேலைகளை, அதாவது மாவு அரைத்தல், ரொட்டி சுடுதல், நீர் அள்ளுதல், வீடு பெருக்குதல் போன்ற வீட்டு வேலைகளை தாமே செய்து கொண்டார்கள். தகப்பனார் மனதிலும், கணவனார் கண்ணிலும் நிறைவாக வாழ்ந்தார்கள். இறையச்சம், நாணம், பொறுமை, எளிமை, தருமம், பக்தி, பற்றற்ற வாழ்வு போன்ற நற்பண்புகள் நிறைந்தவராகக் காணப்பட்டார்கள்.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வபாத்தான போது மிகவும் கலங்கித் துடித்தார்கள். இத்தனை பாசங்கள், கொண்ட அவர் தந்தை வபாத்தாகி ஆறு மாத காலத்தின் பின் அவர்களும் வபாத்தாகி விட்டார்கள். (இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்) இவர்கள் ஹிஜ்ரத்தின் பின் பத்தாம் ஆண்டு ரமழான் மாதம் தமது 29 ஆம் வயதில் வபாத்தானார்கள். அவர்களின் வேண்டுகோளின்படி இரவில் அடக்கம் செய்யப்பட்டார்கள்.

அன்னை பாத்திமா நாயகியார் மீது அவர்களின் திருப்பேரரான சங்கைமிகு ஜமாலிய்யா அஸ்ஸையிது கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள் இயற்றிய பாத்திமா நாயகியார் மாலையை நாம் பாடிப்பாடி மகிழ்வோம்.

233. பாத்திமா நாயகியை பார்த்ததில்லை யெவ்வாணும்
பாத்திமா நாயகியும் பார்த்ததில்லை ஆண்களையே.

234 திடமான வடிவத்திலும் திரமான வார்த்தையிலும்
நடையுடை பாவனைகள் நாயகத்தை ஒத்தனகாண்.

235. உண்மையே சொல்லுவதில் உயர்வான பாத்திமத்தை
என்றும்நிக ராரெவரும் என்றார்கள் நாயகமே.

236. அழியாத வழகும் அரிதான வார்த்தைகளும்
எளிதான நடையுடையு முள்ளவர்கள் பாத்திமத்தே.

237. ஊனுறக்க விழிப்பினிலும் உடைநடை பாவனையில்
தீன் நபிக்கு ஒப்பாவார் தீதற்ற பாத்திமத்தே.

238. உண்மை யுரைப்பதிலும் உகநபிக் கொப்பாவார்
பெண்ணின் பெருமையிலும் பிறிதெவரும் ஒப்பாகார்.

239. எளியவராய் வாழ்வதிலே என்றும்பெரும் இன்பம்கண்டார்
தெளிவான இந்நடையில் தீதறவே நடந்து கொள்வார்.

240. எளிதான உணவுகளை எப்பொழுதும் உண்பார்கள்.
களிப்பான வாழ்நாளை கனிவாகக் கழிப்பார்கள்.

241. தந்தைமுடி சூடாமன்னர் தாயாரும் பெரும் வணிகர்
விந்தைமிக்க மகளாரோ வியமான ஏழையராம்.

242. நபியின் குடும்பம் நலிவான வாழ்வதனில்
தபமாக வாழ்ந்தார்கள் தயவாக எப்பொழுதும்.

243. . இறுதிநாளை எண்ணியெண்ணி எப்பொழுதும் அஞ்சுவார்கள்
மறுமையின் தண்டனைக்கு மனஞ்சோர்வர் பாத்திமத்தே

244. ஏழைஎளியோர்க்கு இனிதாக வழங்குவதில்
ஞாலத்தில் யாரும்ஒக்கார் நலவான நாயகிக்கு.

250. மாவரைக்கும் போதினிலே மயக்கமாய் ஆட்டுக்கல்லில்
ஆவதறி யாதுசாய்வார் அன்பான பாத்திமத்தே.

251. கல்விகற்கப் பெண்கள்பலர் கதியாக வருவதுண்டு
அல்லாஹ்வின் குர்ஆனும் அழகுநபி போதனையும்,

252. நல்லாகப் பயிற்றுவிப்பர் நல்லபோத னைகளையும்
வள்ளல்நபி அன்புமகள் அறிவான பாத்திமத்தே.

253. பாத்திமா நாயகியின் பண்பான போதனைகள்
ஏத்தமாய்க் கேட்டிடினே இறையோனின் அருள்சுரக்கும்

254. அயல்பாகத் துள்ளவர்க்கு அழகாக வழங்கிடுங்கள்
மயல்கொள்ளும் இன்பந்தனை மதித்து நடக்காதீர்.

255. மாடமாளி கைகளிலே வாழ்ந்துவந்தோர் எங்குப்போனார்
ஆடம்பரம் விட்டுவிட்டு ஆற்றுங்கள் நல்வினைகள்.

256. கர்வந்தான் மிகவும் கடிய தெனச் செப்பிடுவேன்
இறையோனை மறந்துவந்த இன்பந்தான் மோசஞ்செய்யும்.

257. நற்குணங்கள் சிறந்தவைகள் நல்லகுண முள்ளவர்கள்
எற்றானும் மனமகிழ்வர் என்றும் திருப்திகொள்வர்.

258. பேராசை பொறாமை பெருமை கருவந்தனை
சீராக விட்டுவிட்டுத் திருத்தமாய்த் தூய்மையாவீர்.

259. நாடோறும் நீராடுவார் நல்லவுழூ செய்திடுவார்
நாடிநிற்கும் வுழூவுடனே நாள்தோறு மிருந்திடுவார்.

260. நேற்றுத்தாம் செய்துவந்த நிறைவான வினைகளெல்லாம்
தேற்றமாய் எண்ணிஎண்ணி தெளிவார்கள் பாத்திமத்தே

261. நல்லதனை ஏற்றுக்கொள்வார் நல்லதல்லாச் செயல்களையே
எள்ளளவு மேற்றுக்கொள்ளார் எழிலான பாத்திமத்தே.

262. தம்கையால் தவறிழைப்பின் தாமே திருத்திக்கொள்வார்
சும்மைகளை மனக்குள்வைத்துச் சோராரே பாத்திமத்தே

# அன்னை ஆயிஷா (ரலி)

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஆருயிர்த் தோழரும், அருமை நண்பருமான அபூபக்கர் (ரலி) அவர்களின் செல்வப் புதல்வி தான் அன்னை ஆயிஷா (ரலி) ஆவார்கள். திருமறைக் குர்ஆனில் பல இடங்களில் அன்னையவர்ளின் பொருட்டால் பல குர்ஆன் வசனங்களை இறைவன் இறக்கியருளியுள்ளான். பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை மணந்து கொண்ட மனைவியர்களில், மிகச் சிறப்பு வாய்ந்தவர். இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய மனைவியாக இருப்பதற்கும் அல்லாஹ் அவர்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான். இன்னும் அன்னையவர்களின் உருவத்தை பச்சைப் பட்டுத் துணியில் வைத்து இறைத்தூதர் அவர்களுக்கு வானவர் தலைவர் ஜிப்ரில் (அலை) அவர்களால் காட்டப்பட்ட நற்பெயருக்கும் சொந்தக்கார ராவார்கள்.

மிகச் சிறந்த அறிவாளியாகவும், அதிக ஞாபகசக்தியும் பெற்றுத் திகழ்ந்த அன்னையவர்கள், இறைத்தூதர்அவர்களுடன் மிக நீண்ட காலங்கள் வாழ்ந்திருந்ததன் காரணமாக, அதிகமான நபிமொழிகளையும் நமக்கு அறிவிப்புச் செய்திருக்கின்றார்கள். இஸ்லாமிய பிக்ஹுச் சட்டங்கள், ஷரிஅத் சட்டங்கள் இன்னும்இஸ்லாமியச் சட்டங்களின் பல கிளைகளிலும் அன்னையவர்களுக்கு இருந்த தெளிவான ஞானத்தின் மூலமாகவும், அதன் விளக்கங்கள், இறைத்தூதர் அவர்களுக்கு மனைவியாக வாழ்க்கைப் பட்டிருந்ததன் காரணமாக அவர்களுடன் அதிக நேரங்கள் இணைந்திருந்ததன் காரணமாக அவர்களிடமிருந்து கற்றுக் கொண்டவைகள், இன்னும் நேர்மை, நாணயம், நம்பிக்கை ஆகியவற்றில் மிகச் சிறந்து விளங்கிய அன்னையவர்கள், அவர்கள் வாழ்ந்த கால கட்டத்தில் ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாகவே திகழ்ந்தார்கள் என்றால் அதில் மிகையில்லை.

அன்னையவர்கள் மிகவும் இளகிய மனதுடையவர்கள். அவர்களது வீட்டிற்குள் நுழைந்த எவரும் வெறுங்கையுடன் திரும்பிச் சென்றதில்லை. வானவர் தலைவர் ஜிப்ரில் (அலை) அவர்கள் மூலமாக இறைவனின் ஸலாத்தைப் பெற்றுக் கொண்ட நற்பேறு பெற்றவர்கள். இன்னும் இறைத்தூதர்அவர்களின் மலரிதழ்களின் மூலமாக சொர்க்கம் உண்டென நன்மாராயத்தைப் பெற்றுக் கொண்டவர்கள். இறைத்தூதர்அவர்களின் இறுதி நேரம் வாழ்வு அன்னையவர்களின் மடியில் தான் கழிந்தது. அன்னையவர்கள் வாழ்ந்த அந்த வீடு தான் இறுதித் தூதர் அவர்களின் மண்ணறையாகவும், நெடுதுயில் கொள்ளும் இடமாகவும் ஆனது. அன்னையவர்கள் வாழ்ந்த காலத்திலும் சரி, இப்பொழுதும் எப்பொழுதும் அவர்கள் வாழ்ந்த அந்த இல்லம் வானவர்களால் எப்பொழுதும் சூழப்பட்ட நிலையிலும், இறைவனின் சாந்தியும், சமாதானமும். அருளும் இறங்கிக் கொண்டிருக்கக் கூடிய, புகலிடமான மதீனாவாகவும் இருந்து கொண்டிருக்கின்றது

# என்றும் வாழும் பதுரு ஸஹாபாக்கள்!

அல்லாஹ்வுடைய பாதையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்களென்று சொல்லாதீர்கள். மாறாக அவர்கள் (இறைவனிடத்தில்) உயிருள்ளவர்களாக இருக்கிறார்கள். எனினும் உங்களால் இதை உணர்ந்து கொள்ள முடியாது.

**(அல்குர்ஆன் 2 : 154)**

மேற்கூறிய குர்ஆன் வசனத்திற்கு அல்லாமா முல்லா அலிய்யுல் காரி (ரஹ்) அவர்கள் விளக்கம் கூறும்போது, மண்ணறையில் அடக்கம் செய்யப்பட்ட ஷுஹதாக்களின் உடலுக்கும், உயிருக்கும் தொடர்புகள் இருந்து கொண்டிருக்கும். அத்தொடர்பினால்தான் மண்ணறையில் இருந்து குர்ஆன் ஓதும் சப்தமும், மேலும் தொழும் காட்சியும் காணப்பட்டுள்ளது என அவர்கள் விளக்கமளிக்கிறார்கள்.

**(மிர்காத்)**

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்கள் விண்ணுலகப் பயணத்தின் போது மூஸா (அலை) அவர்களை பைத்துல் மக்தஸில் உள்ள செம்மணல் குன்றருகில் உள்ள அவர்களின் மண்ணறையில் தொழும் காட்சியில் கண்டேன் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியிருப்பதும் இந்த அடிப்படையில்தான்.

ஷுஹாதாக்களின் உடலோடு உயிரின் தொடர்பு இருப்பதின் காரணமாகத்தான் அவர்களுக்கு ஸலாம் சொன்னால் பதில் ஸலாம் கேட்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களது சிலரின் மண்ணறைகளை சில சந்தர்ப்ப சூழலால் பல்லாண்டுகள் கழித்து தோண்டப்பட்ட பொழுது அவர்கள் உடல்கள் அழியாமல் வைக்கப்பட்டது போலவே புத்தம் புதிதாக இருந்தது. இதற்கு பத்ரு ஸஹாபாக்களின் வரலாற்றில் ஏராளமான சான்றுகள் இருக்கின்றன.

**முதல் சாட்சி**

ஹள்ரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்கள் மரணவேளையில் செய்த வஸிய்யத்தின் போது ‘‘நான் மரணித்துவிட்டால், என்னை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ரவ்லா ஷரீப் இருக்கும் அறையின் வாசலில் கொண்டு வையுங்கள், அறை தானாக திறந்தால் என்னை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பக்கத்தில் அடக்குங்கள். இல்லையெனில் பொது மைய வாடியில் அடக்கிவிடுங்கள்’’ என்றார்கள். அதன்படி அவர்கள் மரணித்த பின் அவர்களின் ஜனாஸாவை சுமந்து வந்து நபிஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரவ்ளா ஷரீப் வாசல் பக்கத்தில் வைத்த பொழுது அறையின் கதவு திறந்து உள்ளேயிருந்து ‘‘நபியின் உயிர் நேசரை அவர்தம்

நேசரோடு நுழைத்துவிடுங்கள்'' என சப்தம் வந்தது. இந்த நிகழ்ச்சியில் மண்ணறையில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஹயாத்துன் நபியாக இருப்பதைப் போல பத்ரு ஸஹாபியும் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உயிர் நேசருமான அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களும் உயிருள்ள ஜனாஸாக்கள் தான் என்பதை தெளிவாக உணர முடிகிறது. **(நூல்: தப்ஸீர் கபீர்)**

**உலகமே கண்டு வியந்தது.**

பக்தாதிலிருந்து 40 மைல் தொலைதூரத்தில் ஹள்ரத் ஸல்மான் ஃபார்ஸி (ரலி) அவர்களின் அடக்கஸ்தலம் உள்ளது. இதன் காரணமாக அந்த ஊருக்கே ''**ஸல்மான் பாக்**'' என்றழைக்கப் படுகிறது. இதன் பழைய பெயர் மதாயின். இது பல காலமாக இராக்கின் தலைநகரமாக இருந்து வந்துள்ளது. இங்கிருந்து இரண்டு பர்லாங்கு தொலைதூரத்தில் நாயகத் தோழர்களான ஹள்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி), ஹள்ரத் ஹுதைபா (ரலி) ஆகியஇரு ஸஹாபிகளின் கப்ரு உள்ளது. அருகே தஜ்லா நதி ஓடுகிறது. ஹள்ரத் ஹுதைபா (ரலி) அவர்கள் கப்ரில் தண்ணீர் புகுந்தது. ஹள்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் கப்ரிலும் அது வெளிப்பட்டது. இந்த நிலையில், முதலாம் பைசல் மன்னர் மற்றும் இராக் தலைமை முஃப்தீ (நீதிபதி) ஆகியோர் தனித்தனியாகக் கண்ட கனவில் மேற்படி இரு ஸஹாபாக்கள் தோன்றி ''எங்களின் கப்ருகளை இடம் மாற்றுங்கள்'' என்று கூறினார்கள்.

முஃப்தி சாஹிப் அவர்கள் கப்ரைத் தோண்டி புனித உடல்களை அங்கிருந்து அகற்றி பாதுகாப்பான வேறு இடத்திற்கு மாற்ற அனுமதியளித்தார். மன்னர் அதற்கான தேதி முடிவு செய்து பத்திரிகைகளுக்கு தகவல் கொடுத்தார். இந்த அரியநிகழ்ச்சியினைக் காண துருக்கி மற்றும் எகிப்து நாட்டிலிருந்து அரசாங்க தூதுக் குழுவினர் குறிப்பிட்ட தேதியில் வந்து சேர்ந்தனர். வெளிநாடுகளிலிருந்து எல்லா மதத்தைச் சேர்ந்தவர்களும், பல்வேறு கொள்கை கோட்பாடு உடையோர்களுமாக சுமார் ஐந்து லட்சம் பேர் மதாயினில் ஒன்று கூடினர். அந்த சிறிய நகரம் இரண்டாம் பக்தாதாக காட்சி அளித்தது.

ஹிஜ்ரி 1350 துல்ஹஜ் மாதம் கடைசிப்பத்தில் 1932 ஏப்ரல் மாதம் ஒரு திங்கள் கிழமை பகல் 12 மணிக்கு உலக நாடுகளின் தூதர்கள் இராக் பாராளுமன்ற உறுப்பினர்கள், மன்னர் பைசல் மற்றும் இலட்சக்கணக்கான மக்கள் முன்னிலையில் ஹள்ரத் ஹுதைபா (ரலி) ஹள்ரத் ஜாபிர் (ரலி) இருவரின் பூத உடலும் கிரேன் மூலம் வெளியே கொண்டு வரப்பட்டது. மன்னர் பைசல், இராக் தலைமை முஃப்தி, துருக்கி குடியரசின் அமைச்சர் முக்தார், பட்டத்து இளவரசர் பரூக் ஆகியோர் புனித உடல்களை மிகுந்த மரியாதையுடன் பெற்று அதற்காக விஷேசமாக உருவாக்கப்பட்ட கண்ணாடிப் பேழையில் வைத்தார்கள். அந்த இரு ஸஹாபிகளின் புனித உடலைப் பொதிந்திருந்த கஃபன் துணி மட்டுமல்ல; அவர்களின் தாடி முடிகூட நல்ல நிலையில் புத்தம் புதிதாக இருந்ததைப் பார்த்தால் பதிமூன்றுநூற்றாண்டு காலத்திற்கு முன்புள்ள பழமை வாய்ந்த ஜனாஸாவாக அது

இல்லாமல் சில மணிநேரத்திற்கு முன்பு அடக்கம் செய்யப்பட்டதைப் போன்று புத்தம் புதிய ஜனாஸாக்களாக இருந்தன. இதில் மிகுந்த ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால், அந்த இரு ஸஹாபாக்களின் கண்கள் புத்துயிரோடு ஒளிவீசிக் கொண்டிருந்ததுதான். பலபேர் அதில் பார்வையை செலுத்தினர். ஆனால் அவர்களால் கூர்ந்து பார்க்க முடியவில்லை. பெரிய பெரிய மருத்துவர்களெல்லாம் இதைக் கண்டு வியந்தனர். ஏனெனில் இறந்து ஆறு மணி நேரத்திற்குள் கண் அதன் பார்க்கும் சக்தியை இழந்துவிடும். ஆனால் இங்கு 13 நூற்றாண்டு காலமாகியும், அவர்களின் கண்கள் கெடாமல் அப்படியே உள்ளது. **ஜெர்மனைச் சார்ந்த ஒரு கண் மருத்துவ நிபுணர் இதைக் கண்ணுற்ற உடனே அந்த இடத்திலேயே தலைமை முஃப்தியின் கரம் பற்றி முஸ்லிமாகிவிட்டார்.** இஸ்லாம் சத்தியமானது என்பதற்கு இதைவிட பெரிய ஆதாரம் வேறு என்ன தேவையிருக்கிறது? என்று கூறினார்.

புனிதப் பேழையில் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்த அவர்களின் முகத்திலிருந்து கஃபன் விலக்கப்பட்டது. அந்தப் புனித உடலுக்கு இராக் இராணுவ வீரர்கள் மரியாதை செலுத்தினர். பின்னர் கூட்டங்கூட்டமாக வந்து எல்லோரும் ஜனாஸாவைப் பார்த்து மெய்சிலிர்த்து செய்வதறியாது திகைத்து நின்றனர். வாழ்க்கையில் கிடைப்பதற்கரிய பாக்கியம் கிடைக்கப் பெற்றதை எண்ணி எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்தினர். பின்னர் தொழுகையை நிறைவேற்றினர்.

மன்னர்களும் உலமாக்களும் புனித உடல்கள் வைக்கப்பட்டிருந்த அந்தப் பேழையை தங்களின் தோளின் மீது சுமந்தனர். பிறகு உலகநாட்டுத் தூதுவர்கள், உயரதிகாரிகள் தோள் கொடுக்க, தொடர்ந்து மற்றவர்களுக்கும் அந்த பாக்கியம் கிடைக்கப் பெற்றது. விமானங்கள் பூக்களைத் தூவி மலர் அஞ்சலி செலுத்தின. வழிநெடுக பெண்களும் பேழையை ஜியாரத் செய்ய அனுமதியளிக்கப்பட்டது. நான்கு மணி நேரத்திற்குள் புனிதப் பேழை இரண்டும் சல்மான்பாக் கப்ருஸ்தானை அடைந்தது. அல்லாஹு அக்பர் என்னும் முழக்கம் விண்ணைப் பிளக்க இஸ்லாத்தின் உயிருள்ள இரு தியாகிகளின் புனித உடல்கள் ஹள்ரத் சல்மான் பார்ஸி (ரலி) அவர்களின் கப்ருக்குப் பக்கத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. மறுநாள் பக்தாதின் திரையரங்குகளில் இந்த படம் திரையிடப்பட்டு காட்டப்பட்டது. இந்நிகழ்ச்சியைக் கண்ணுற்ற பக்தாத் வாழ் முஸ்லிமல்லாத பல முக்கியப் பிரமுகர்களின் குடும்பங்கள் இஸ்லாத்தில்இணைந்தன.

**(தகவல் : மஆரிஃப் மாத இதழ், ஜனவரி 1979 ஆஜம்கட் உ.பி. ஆதாரம் : ஏக் ஆலமி தாரீக் ஓர் உலக வரலாறு)**

---

‘யார் அபாய நேரங்களில் வீரர்களுக்குக் காவல் புரிகிறாரோ அவரின் அந்த இரவு ‘கத்ரு’ டைய இரவை விடச் சிறந்தது” என அண்ணல் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியதாக, ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (ஹாகிம்)

பொருட் கடமை.

# ஜகாத்

இறை நம்பிக்கையாளர்களே நாம் உங்களுக்குத் தந்ததிலிருந்து செலவளியுங்கள். (குர்ஆ ன் 2 : 54)

எந்தச் செல்வத்திற்கு உங்களை தன்னுடைய பிரதிநிதியாக (அல்லாஹ்வாகிய) அவன் ஆக்கினானோ அந்தச் செல்வத்திலிருந்து செலவளியுங்கள்

- (குர்ஆன் 57 : 7 )

இஸ்லாத்தின் நான்காவது கடமையான ஜகாத் வறியவர்களும் வாழ வேண்டும் என்பதற்காக வல்ல இறைவனால் வகுக்கப்பட்ட வளமையான பொருளாதாரத் திட்டம் ஆகும். ஜகாத் எனும் அரபிச் சொல்லுக்கு தூய்மைப் படுத்துதல் என்று பொருள். செல்வந்தர்கள் சேமிக்கும் நிதியிலிருந்து இரண்டரை சதவீதம் ஏழைகளுக்காக வெளியேற்றப்பட்டாக வேண்டும். இந்த விகிதப்படி செல்வந்தர்கள், ஏழைகளின் உரிமையைத் தம்முடைய உடைமையிலிருந்து வெளியேற்றத் தவறினால் செல்வர்கள் தம் வசம் வைத்திருக்கும் எஞ்சிய 97.5 சதவீதம் நிதியும் தூய்மையை இழந்து விடுகிறது. இவ்வாறு தூய்மையை இழக்காமல் செல்வந்தர்களின் நிதி முழுவதும் தூய்மையுடன்இருக்க ஏழைகளுக்கு வழங்கப்படும் இரண்டரை சதவீதம் கட்டாயத் தருமம் துணை செய்வதால் இந்தக் கட்டாயத் தருமத்திற்கு ஜகாத் (தூய்மைப் படுத்துதல்) என்று வைக்கப்பட்ட பெயர் பொருத்தமாக அமைகிறது.

**ஜகாத் கடமையாகத் தகுதி பெறும் பொருட்கள்**

1. தங்கம், வெள்ளி அல்லது இவ்விரண்டின் இடத்தை நிரப்பும் கரன்சி நோட்டு போன்ற நாணயங்கள்.

2. வியாபாரப் பொருட்கள்

3. தானியங்கள் மற்றும் பழ வகைகள்

4. ஆடு, மாடு போன்ற கால்நடைகள்

**ஜகாத் வழங்கக் கடமையாக்கப்பட்டவர்களிடம் இருக்க வேண்டிய நிதியின் அளவு.**

1. ஜகாத் நிதி தங்கமாக இருந்தால், 85 கிராமுக்குக் குறையாத அளவு தங்கத்தை ஒரு வருடம் முழுவதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

2. வெள்ளியாக இருந்தால் 595 கிராமுக்குக் குறையாத அளவு வெள்ளியை ஒரு வருடம் முழுவதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

3. ரூபாய் நோட்டுக்களாக இருந்தால் 85 கிராம் தங்கத்தின் அன்றைய மார்க்கெட் விலை என்ன? என்ற விபரத்தைத் தெரிந்து, அந்த விலைக்குக் குறையாத அளவு ரூபாயை ஒரு வருடம் முழுவதும் கைவசம் வைத்திருக்க வேண்டும்.

4. ஜகாத் நிதி வியாபாரப் பொருட்களாக இருந்தால், வியாபாரம் தொடங்கிய நாளிலிருந்து ஒரு வருடம் நிறைவு பெற்றவுடன், வியாபாரப் பொருட்களின் விலைப் பட்டியல் தயாரிக்கப் பட வேண்டும். அப்போது மொத்தப் பொருட்களின் விலை மதிப்பு 85 கிராம் தங்கத்தின் விலை மதிப்பை அடைந்து விட்டால் அந்தப் பொருட்களுக்காக ஜகாத் கொடுப்பது அவசியம் ஆகும். வியாபாரப் பொருட்கள் ஒருவர், உரிமையாக்கிக் கொண்ட ஆரம்பக் கட்டத்தில் அவை 85 கிராம் தங்கத்தின் விலை மதிப்பை அடையாமலிருந்தாலும் சரியே, ஒரு வருடத்தின் முடிவில் அவை மேற்கண்ட விலை மதிப்பை அடைந்தால் அதற்கென ஜகாத் கொடுப்பது அவசியமாகும். வருடத்தின் இடைப்பட்ட நாட்களில் கிடைக்கும் இலாபங்களெல்லாம் மூலதனத்துடன் சேர்க்கப்பட்டு கணிக்கப்படும். எனவே, 25,000 ரூபாய் மூலதனத்துடன் ஒரு வியாபாரத்தை தொடங்கிய ஒருவருக்கு, மாதம் சராசரி 1500 ரூபாய் வருமானம் வந்து கொண்டிருந்ததென்றால் வருட முடிவில் அவருடைய மொத்த இலாபமாகிய 18,000 ரூபாயை 25,000 ரூபாயுடன் சேர்த்துக் கூட்டும் போது வரும் 42,000 ரூபாய் 85 கிராம் தங்கத்தின் விலையை விட அதிகமானால் இத்தகையவர் ஜகாத் கொடுக்க கடமைப்பட்டிருக்கிறார்.

5. உணவாக அமைந்து, வழக்கமாக விரும்பி உண்ணப்படும் அரிசி, கோதுமை போன்ற தானியங்களாகவோ, பேரீச்சம் பழமாகவோ ஜகாத்துப் பொருள்கள் அமைந்திருந்தால் – அவை உமி, தோல் ஆகியவை நீக்கப்பட்டு சேமிக்கப்படுகிறதா? அல்லது உமி, தோல் ஆகியவை நீக்கப்படாமல் சேமிக்கப்படுகிறதா? என்பதைக் கவனிக்க வேண்டும். உமி, தோல் போன்றவை நீக்கப்பட்டு சேமிக்கப்பட்டால் அந்தத் தானியம் 900 லிட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டும். உமி, தோல், நீக்கப்படாமல் சேமிக்கப்பட்டு இருந்தால் அந்தத் தானியம் 1800 லிட்டருக்குக் குறையாமல் இருக்க வேண்டும்.

எனவே, முதல் வகைத் தானியம் 900 லிட்டருக்குக் குறைவாக இருந்தாலோ, இரண்டாம் வகைத் தானியம் 1800 லிட்டருக்குக் குறைவாக இருந்தாலோ இந்தத் தானியத்திலிருந்து ஜகாத் வழங்கிட அவசியமில்லை.

6. ஜகாத் நிதி ஆடு, மாடு போன்ற கால்நடையாக இருக்கும் போது அவற்றிலிருந்து ஜகாத் வழங்குவது அவசியமாக வேண்டுமானால் 40 – க்குக்குறையாத ஆடுகளையோ அல்லது 30 –க்குக் குறையாத மாடுகளையோ ஒருவர் பெற்றிருக்க வேண்டும். 40 – க்குக் குறைவான ஆடுகளைப் பெற்றிருப்பவர்களும், 30 – க்குக் குறைவான மாடுகளைப் பெற்றிருப்பவர்களும் ஜகாத்து கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

**ஜகாத் கடமையாகும் தகுதிபெறும் பொருட்களிலிருந்து ஜகாத்தின் அளவீடுகள்.**

1. தங்கத்திலிருந்து வழங்க வேண்டிய ஜகாத் 2.5 சதவீதம் ஆகும். எனவே, ஜகாத் கடமையான குறைந்தபட்ச அளவாகிய 85 கிராம் தங்கத்தை வைத்திருப்பவர்கள் அதிலிருந்து 2 கிராம் 15மி.கிராம் தங்கத்தை ஜகாத்தாக வழங்க வேண்டும்.

2. வெள்ளியிலிருந்து வழங்க வேண்டிய ஜகாத்தும் 2.5 சகவீதம் ஆகும். எனவே, ஜகாத்து கடமையான குறைந்தபட்ச அளவாகிய 595 கிராம் வெள்ளியை வைத்திருப்பவர்கள் அதிலிருந்து 14 கிராம் 895 மி.கிராம் வெள்ளியை ஜகாத்தாகக் கொடுக்க வேண்டும்.

3. ரூபாய் நோட்டுக்களிலிருந்து வழங்க வேண்டிய ஜகாத்தும் 2.5 சதவீதம் ஆகும். எனவே ஜகாத்து கடமையான குறைந்தபட்ச அளவாகிய 85 கிராம் தங்கத்தின் விலைமதிப்பு பெற்ற ரூபாயை வைத்திருப்பவர்கள், அதிலிருந்து 2 கிராம் 25 மி.கிராம் தங்கத்தின் விலை மதிப்புள்ள ரூபாயை ஜகாத்தாக வழங்க வேண்டும்.

4. வியாபாரப் பொருட்களிலிருந்து வழங்க வேண்டிய ஜகாத்தும் 2.5 சதவீதமாகும். எனவே, ஜகாத்து கடமையான குறைந்தபட்ச அளவாகிய 85 கிராம் தங்கத்தின் விலை மதிப்புடைய வியாபாரப் பொருட்களை வருடக் கடைசியில் வைத்திருப்பவர்கள், அதிலிருந்து 2 கிராம் 125 மி.கிராம் தங்கத்தின் விலை மதிப்புள்ள வியாபாரப் பொருட்களின் விலையை ஜகாத்தாக வழங்க வேண்டும்.

5. தானியங்கள் முளைத்து வளர்வதற்காகப் பொருட் செலவின்றி நீர்ப்பாசனம் செய்யப்பட்டால் (அதாவது மழை நீரினால் பயிர் முளைத்தல்) அத்தகைய தானியங்களில் 900 லிட்டர் தானியத்தை வைத்திருப்பவர்கள் 90 லிட்டர் (1 : 10 ) தானியத்தை ஜகாத்தாக வழங்க வேண்டும். அதே நேரத்தில்தானியங்கள் முளைப்பதற்காகப் பொருட் செலவுடன் நீர்ப் பாசனம் செய்யப்பட்டால்

(அதாவது பம்பு செட் வைத்து தானியங்களுக்கு நீர்ப் பாய்ச்சினால்) அத்தகைய தானியங்களில் 900 லிட்டர் தானியத்தை வைத்திருப்பவர்கள் 45 லிட்டர் (1 : 20) தானியத்தை ஜகாத்தாக வழங்க வேண்டும்.

6. ஆடுகளிலிருந்து ஜகாத்து வழங்குபவர்கள் 40 முதல் 120 வரையுள்ள ஆடுகளைக் கைவசம் வைத்திருந்தால் அவற்றிலிருந்து ஒரு ஆட்டையும், 121 முதல் 200 வரையுள்ள ஆடுகளைக் கைவசம் வைத்திருந்தால் அவற்றிலிருந்து 2 ஆட்டையும், 201 முதல் 399 வரையுள்ள ஆடுகளைக் கைவசம் வைத்திருந்தால் அவற்றிலிருந்து 3 ஆடுகளையும், 400 முதல் 499 வரையுள்ள ஆடுகளைக் கைவசம் வைத்திருந்தால் அவற்றிலிருந்து 4 ஆடுகளையும், அதற்கு மேல் ஒவ்வொரு நூற்றுக்கும் ஒரு ஆட்டை ஜகாத்தாக வழங்க வேண்டும்.

6. மாடுகளிலிருந்து ஜகாத்து வழங்குபவர்கள் 30 முதல் 39 வரையுள்ள மாடுகளைக் கைவசம் வைத்திருந்தால் அவற்றிலிருந்து ஒரு வயதுள்ள கன்றையும், 4 முதல் 59 வயது வரையுள்ள மாடுகளைக் கைவசம் வைத்திருப்பவர்கள் இளம் பசுவையும், 60 மாடுகளைக் கைவசம் வைத்திருப்பவர்கள் ஓரு வயதுள்ள 2 கன்றுகளையும், பிறகு ஒவ்வொரு 30 மாடுகளுக்கும் ஒரு வயதுள்ள ஒரு கன்று வீதமும், ஒவ்வொரு 40 மாடுகளுக்கும் 2 வயதுள்ள ஒரு இளம் பசு வீதமும் ஜகாத்து கொடுக்க வேண்டும். இவற்றில் இரண்டு அளவுகளுக்கு இடைப்பட்ட எண்களுக்கு கணக்குப் பார்க்க வேண்டாம்.

**ஜகாத்துப் பெற்றிட தகுதி வாய்ந்தவர்கள்**

1. எவ்வித வருமானமும் இல்லாத பரம ஏழைகள் (பக்கீர்)
2. வருமானத்தை விட செலவினங்கள் விஞ்சிய ஏழைகள் (மிஸ்கீன்)
3. புதிதாக இஸ்லாத்தைத் தழுவியவர்கள்
4. அடிமைகளை விடுதலை செய்தல்
5. ஜகாத்து நிதியின் வசூலர்களாக நியமிக்கப்பட்ட ஊழியர்கள்
6. கடனில் மூழுகித் தவிப்பவர்கள்
7. அல்லாஹ்வின் பாதையில் போர் புரிவோர்
8. வழிப்போக்கர்

இந்த எட்டுக் கூட்டத்தாரைத் தவிர மற்றவருக்குக் கொடுத்தால் ஜகாத்து செல்லாது.

# முப்பது நாள் மகத்துவம்!

شهررمضـــان الـــذى انـــزل فيـــه القـــران هـــدى للنـــاس
وبينـــات مـــن الهـــدى والفرقـــان

*மக்களுக்கு வழிகாட்டியாகவும், நன்மை தீமைகளை பிரித்தறிவித்து நேரான வழியை தெளிவுபடுத்தக் கூடியதாகவும் உள்ள குர்ஆன் ரமளான் மாதத்தில் அருளப்பட்டது. (அல்குர்ஆன்)*

ரமளானில் குர்ஆனை அருளப்பட்டதன் மூலம் ரமளான் மாதம் சிறப்பும் மகத்துவமும் பொருந்தியது என்பதை இவ்வசனத்தின் மூலம் அல்லாஹ் தெளிவுபடுத்தியுள்ளான்.

ஆம்! மனிதனை மனிதனாக மாற்ற வந்த வேதமாகிய குர்ஆன் இறக்கி வைக்கப்பட்ட மாதம் இது.

அந்த காரிருளில் சிக்கித் தடுமாறி சீரழிந்து கிடந்த மனிதனை ஒளி உலகுக்குக் கொண்டு வந்த வேதமாம் குர்ஆன் இறங்கிய மாதம் இது.

வளர்ந்து வரும் ஜாதியக் கும்பல்களை கதிகலங்கச் செய்யும் ஏகத்துவக் கொள்கையை உலகில் உயர்த்தி, மொழியால், நிறத்தால் குலத்தால், இனத்தால் மக்களிடையே பாகுபாடுகளை வளர்த்து வந்த பல்வேறு பிரிவு மக்களையும் ஒரே ஆரத்தில் கோர்த்து இன, மொழி, ஜாதி, பாகுபாட்டை வேரறுத்த வேதமாம் அல்குர்ஆன் இறங்கிய மாதம் இது.

குர்ஆன் மட்டுமின்றி உலகிற்கு வழிகாட்ட வந்த அனைத்து வேதங்களும் இந்த ரமளானில்தான் இறக்கி வைக்கப்பட்டன. நபி மூஸா (அலை) அவர்களுக்கு ரமளான் பிறை ஆறில் "தவ்றாத்" வேதமும் தாவூது (அலை) அவர்களுக்கு பிறை பதினெட்டில் "ஜபூர்" வேதமும்ஈஸா (அலை) அவர்களுக்கு ரமளான் பிறை பதின்மூன்றில் ''இன்ஜீல்'' வேதத்தையும் இறைவன் அருளினான்.

ரமளான் மாதச் சிறப்பை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் கீழ்வரும் ஹதீஸ்களும் உணர்த்துகின்றன.

1. ரமளான் மாதம் வந்தவுடன் வானத்தின் வாயில்கள் - சுவனத்தின் வாசல்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் அடைக்கப்படுகின்றன. ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றனர்." *(ஹதீஸ்)*2. "நன்மையைத் தேடுபவனே முன்னேறு! தீமைகளில் உழன்று கிடப்பவனே! உன் தீய செயல்களை விட்டுவிடு." *(ஹதீஸ்)*

3. "பாவமன்னிப்பு தேடுபவன் யார்? அவனது பாவமன்னிப்பு அங்கீகரிக்கப்படும். பிரார்த்தனை செய்வோன் யார்? அவனின் பிரார்த்தனை ஏற்றுக் கொள்ளப்படும். கேட்பவன் யார்? அவனுக்குக் கொடுக்கப்படும் என்று ஒவ்வொரு இரவிலும் இறைவன் தரப்பிலிருந்து அழைப்பு விடுக்கப்படுகிறது." *(ஹதீஸ்)*

ரமளான் மிகச் சிறந்த மாதமாகையால் மிகச் சிறந்த சில அமல்கள், இம்மாதத்தில் கடமையாக்கப்பட்டன. அவைகளில் ஒன்று தான் நோன்பு.

## நோன்பின் மாண்பு

"உங்களின் முன்னுள்ளோர் மீது கடமையாக்கப்பட்டது போலவே, உங்களின் மீதும் நோன்பு கடமையாக்கப்பட்டது. அதனால் (நோன்பினால்) நீங்கள் "தக்வா" (இறைபக்தி) உடையவர்களாக ஆகிவிடலாம்." *(அல்குர்ஆன்)*

பசித்தவுடன் புசிப்பதும், தாகித்தவுடன் குடிப்பதும், ஆசை தோன்றியவுடன் உறவு கொள்வதும், மரணம் வந்ததும் இறந்து விடுவதும் மிருக வாழ்வாகும்.

மனித வாழ்வு இவ்வாறிருப்பது நியாயமன்று : மனிதன் ஒரு இலட்சிய வாழ்வு கொண்டவன். அதற்காக பல தியாகங்கள் செய்ய வேண்டியுள்ளவன். தியாக வாழ்வை மேற்கொள்ளத் தமக்குத் தாமே சில கட்டுப்பாடுகளையும் அடக்கியாளும் தன்மைகளையும் உண்டாக்கிக் கொள்ள கடமைப்பட்டவன்.

அந்தக் கட்டுப்பாடுகள் - அடக்கியாளும் தன்மைக்கு "தக்வா" என்னும் இறைபக்தி தேவை. அந்தத் தன்மையை தருவதே நோன்பாகும் என்பதுதான் இந்த திருவசனத்தின் கருத்தாகும்.

"நோன்பு ஒரு கேடயமாகும்." "நோன்பு நரகத்தை விட்டும் காப்பாற்றும் கேடயமாகும்" என்ற ஹதீஸ்களும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றன. ஹதீஸே குத்ஸியிலே நோன்பு என்பது எனக்கு உரியது அதற்கு நானே கூலி கொடுக்கிறேன். மற்றொரு கருத்துப்படி நானே கூலியாக ஆகிவிடுகிறேன் என்று அல்லாஹ் கூறுகிறான்.

**மறைஞானப்பேழை சந்தா செலுத்தி பத்திரிகை வளர்ச்சிக்கு உதவிடுவீர்!**

# நாகூர் யாசீன் ஆலிம் (ரஹ்)

நாகூரில் நான் சின்னப்பிள்ளையாக இருந்த காலகட்டத்தில் எங்கள் வீட்டு நெல்லுக்கடைத்தெருவுக்கு அருகில், நடந்து போகும் தூரத்தில் இருந்த தெரு ஒன்றுக்கு கொல்லம் பள்ளித்தெரு என்று பெயர். அங்கே யாசீன் ஆலிம் என்று ஒரு பெரியவர் இருந்தார்கள்.

நான் அப்போது பள்ளிக்கூடப் பையனாகவோ அல்லது முதலாண்டு இளங்கலை படிக்கும் மாணவனாகவோ இருந்திருப்பேன்.

ஒருநாள் அவர்கள் வீட்டுக்குப் போனோம். அங்கே என்ன நடந்தது என்று எனக்கு ஞாபகல்லை. ஆனால் ஒரேயொரு விஷயம் மட்டும் நினைவில் இருக்கிறது.

அவர்கள் வீட்டில் மின்சாரம் கிடையாது. கிடையாதென்றால் அதற்கான இணைப்போ, இணைப்புக் கொடுப்பதற்கான முயற்சியோ, அந்த எண்ணமோ கூட இல்லை. எல்லாரும் கைவிசிறியை வைத்துத்தான் விசிறிக்கொண்டிருந்தார்கள்.

யாசீன் அப்பா அவர்கள் ஏதாவது சொன்னார்களா என்றும் எனக்கு நினைவு இல்லை. ஆனால் ஒரே ஒரு விஷயம் மட்டும் நினைவில் உள்ளது.

அது, கரண்ட் கனெக்‌ஷன் அவர்கள் வீட்டுக்குக் கொடுக்காத காரணம்தான். அந்தக்காரணம்கூட எப்படி எனக்குத் தெரியவந்தது என்று நினைவில் இல்லை. எப்படியோ அந்தத் தகவல் மட்டும் என்னிடம் வந்து சேர்ந்துகொண்டது.

நாகூர் யாசீன் அப்பா என்று சொன்னதுமே இந்த தகவல்தான் எனக்கு முதலில் நினைவுக்கு வரும்.

மின்சார இணைப்புக் கொடுக்காததன் பின்னால் அபாரமான காதல் இருந்தது. ஆமாம். அதுவும் இறுதி இறைத்தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்மீது.

பெருமானார் காலத்தில் மின்சாரம் இல்லையல்லவா? அவர்களுக்குக் கிடைக்காத ஒரு வசதி தனக்கும் வேண்டாமென்று யாசீன் அப்பா தன் வீட்டிற்கும் அந்த வசதியைக் கொடுக்கவில்லை.

அறிவுள்ளவர்கள் யாராவது இப்படிச் செய்வார்களா? என்று கேட்டால் செய்ய மாட்டார்கள். ஆனால் அன்புள்ளவர்கள், அருளுள்ளவர்கள் செய்வார்கள். பெருமானர் மீது அதீதப்பிரியும் கொண்டவர்கள் செய்வார்கள்.

ஒருமுறை நபித்தோழர் அபூதர் கிஃப்பாரி அவர்கள் பெருமானாரைத் தேடி நெடுந்தூரம் சென்றார். வழியில் ஓர் அருமையான, இனிப்பான, சுவையான நீர் கிடைத்தது. தாகத்தின் உச்சியில் இருந்த அவர் அதைக்குடிக்காமல், பெருமானார் தான்

அதை முதலில் குடிக்கவேண்டும் என்று விரும்பி அதை எடுத்துக்கொண்டு நீண்ட பயணம் செய்து பெருமானாரைச் சந்தித்து அதைக்கொடுத்தார்.

பெருமானார், அவருக்கும் அந்த நீரைக்குடிக்கக் கொடுத்தார்கள். ஆனால் அவர் தனக்கு மட்டுமே கிடைத்த ஒன்றைத் தான் அனுபவிக்காமல், அதைப் பெருமானாருக்காக எடுத்துச் சென்றிருக்கிறார். நபித்தோழர்களின் மனம் அப்படித்தான் இருந்தது, செயல்பட்டது.

ஒரு நபித்தோழரைப்போல செயல்பட்டுள்ளார்கள். நம் நாகூர் யாசீன் அப்பா.

நம்மால், அல்லது என்னால், பின்பற்ற முடியாத, ஒரு காரியம் இது. ஒரு நாளைக்குக் கொஞ்ச நேரம் மின்சாரம்துண்டிக்கப்பட்டுவிட்டால் கூட எனக்குத் தாங்காது.

இந்த பெருமைக்கும் எளிமைக்கும் உரிய யாசீன் அப்பா, திருமுல்லை வாசலில் அடங்கியிருக்கும் மகான் யாசீன் மௌலானா நாயகம் அவர்களின் கலீஃபா என்பது குறிப்பித்தக்கது.

முக்கியமான கூடுதல் தகவல் என்னவெனில், என் மார்க்கச் சகோதரரும், நெருங்கிய நண்பருமான ஹாஜா கனி அவர்களின் பாட்டனார் தான் நாகூர் யாசீன் அப்பா என்பதுதான்.

அறிவைப் பயன்படுததி வாழ்கின்ற சமுதாயம் நமது. அதில் தவறு இல்லை. அனால் நபித்தோழர்களின் சமுதாயம் பெருமானார் மீது கொண்ட அன்பை மட்டுமே பிரதானமாக எண்ணி, இம்மையைவிட மறுமையே முக்கியம் என்பதை உணர்ந்து வாழ்ந்த சமுதாயமாக உள்ளது.

நம்முடைய சமுதாயத்திலும் அப்படி வாழ்ந்தவர்கள் உண்டு என்பதைச் சொல்லத்தான் இதை எழுதினேன். யாசீன் அப்பாவின் அன்பும் துஆவும் எனக்குக் கிடைக்கும் என்ற நம்புகிறேன் . இன்ஷா அல்லாஹ்.

–நாகூர் ரூமி–

---

ஹதீஸில் வருகிறது: “ஒவ்வொரு முஸ்லிமின் மீதும் அல்லாஹ்வுக்குச் செலுத்த வேண்டிய கடமைகளில் ஒன்று குறைந்தது வாரத்தில் ஒரு முறையாவது குளித்தல் வேண்டும்; மேலும் தனது தலை, உடலைக் கழுவிக் கொள்ள வேண்டும்”

(புகாரி)

“ஒருமுறை அண்ணலெம் பெருமானார் (ஸல்–அம்) அவர்களைச் சந்திக்க சில முஸ்லிம்கள் வருகை தந்தபோது அவர்களின் பற்கள் சுத்தமின்றி இருந்தபடியால் மஞ்சள் பூத்திருந்தன. இதைக் கண்ணுற்ற பெருமானார் (ஸல்–அம்) அவர்கள், ‘ஏன் இவ்வாறு உங்களின் பற்கள் மஞ்சள் பூத்திருக்கின்றன? மிஸ்வாக் செய்து வாருங்கள்’ எனப் பணித்தார்கள்” (முஸ்னத் அஹ்மத்)

திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அரபிக் கல்லூரி நடத்திய,

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34ஆம் தலைமுறைத் திருப்பேரர்

குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித்

**கலீல் அவ்ன் மௌலானா** அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய்

நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின்

# 40ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல்

# 12ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா!

# முதலாவது ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா!

சங்கைக்குரிய ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூது ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள், தங்களது ஆத்துமப் பிள்ளைகளான நமக்காக, ஆயிரம் ஆயிரம் பயணங்களை மேற்கொண்டாலும், எத்தனை ஊர்களுக்கும் நாடுகளுக்கும் பயணப்பட்டிருந்தாலும், இலங்கை வெலிகமையில் பரிபூரண பரக்கத் நிறைந்த பைத்துல் பரக்காவில், தங்களது அறைக்குத் திரும்புவதையும், அங்கே அவதானிப்பதையும் அதிகம் விரும்பியிருந்தார்கள். எனவே, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா நிகழ்வை, அவர்கள் விரும்பியிருந்த அவ்விடத்தில் நிகழ்த்துவதே சாலச்சிறந்தது எனும் படியாக, சரியான 40ஆம் நாள் பிறையில், இலங்கை வெலிகமை பைத்துல் பரக்கா திரு இல்லத்தில், 2024 பிப்ரவரி 10ஆம் தேதி (சனிக்கிழமை) மாலை முதல், பிப்ரவரி 11ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) பகற்பொழுது வரையுமாக, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சி, சங்கைக்குரிய திருக்குடும்பத்தார் சார்பில், அதற்குரிய சிறப்புடனும், கண்ணியம் நிறைந்த வகையிலும் நடைபெற்றது. அதில், இந்தியாவிலிருந்தும் மற்ற நாடுகளிலுள்ள சபைகளிலிருந்தும் ஆத்துமப் பிள்ளைகள் திரளாகக் கலந்து கொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், தங்களது ஆட்சி பீடத்தை அமைத்துக்கொண்ட திருச்சியில் – மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி வளாகத்தில் உள்ள ஷைகு நாயகமவர்களின் தர்ஹா ஷரீஃபில், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியை, விமரிசையாக நடத்தி சங்கைப்படுத்த திட்டமிடப்பட்டது. அதன்படி, 17.02.2024 (சனிக்கிழமை) மாலை தொடங்கி, 18.02.2024 மதியம் வரைநடைபெற்றது.

நிகழ்ச்சிக்காக, இலங்கை வெலிகமையிலிருந்து சங்கைக்குரிய திருக்குடும்பத்தாரும் இலங்கை வாழ் முரீதுப் பிள்ளைகளும் வெள்ளிக்கிழமை மாலை (16.02.2024) அன்றே

இந்தியா வந்து சேர்ந்தனர். 17.02.2024 பகற்பொழுதில், கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத் திருப்பேரர்

சங்கைக்குரிய ஷைகு நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களை, முரீதுப்பிள்ளைகள் தரிசனம் பெற்று ஆசி பெற்றுக் கொண்டார்கள்.

17.02.2024 (சனிக்கிழமை) அஸருக்குப் பிறகு, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் தர்ஹா ஷரீஃபில் 40ஆம் நாள் ஃபாத்திஹா மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியின் முதல் அமர்வு தொடங்கியது. அதில், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் தங்களது தந்தை நாயகம் குத்புல் அக்தாப் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மீது இயற்றியருளிய புனித யாஸீன் மௌலானா (ரலி) மௌலிது ஷரீஃபும், புனித இரசூல் மாலை ஷரீஃப் மஜ்லிஸும் அடுத்தடுத்து நடைபெற்றன. மஜ்லிசுகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பான இரவு உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

18.02.2024 (ஞாயிற்றுக்கிழமை)..... புனித ரவ்ளா ஷரீஃபின் உட்புறமும் வெளிப்புறமும் மலர் அலங்காரங்கள் கண்களையும் மனதையும் சுண்டியிழுக்கும் வண்ணம் செய்யப்பட்டிருந்தன. இரம்மியமான சூழலில் கூடியிருந்தோர் மத்தியில் ஆத்துமார்த்த அமைதி நிலை நிலைப்பட்டிருந்தது. காலை சரியாக 7 மணிக்கு, கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத் திருப்பேரர் சங்கைக்குரிய ஷைகு நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் தர்ஹா ஷரீஃபிற்கு வருகை புரிந்தார்கள். திட்டமிட்டபடி, திருக்குர்ஆன் ஷரீஃப் தமாம் செய்யும் நிகழ்ச்சி தொடங்கியது. குழுமியிருந்த சங்கைக்குரிய திருக்குடும்பத்தார், இலங்கை ஆத்தும சகோதரர்கள், கலீபாக்கள், ஆலிம் பெருமக்கள், முரீதுப் பிள்ளைகள் என ஆளுக்கொரு ஜுஸ்வு ஓதி திருக்குர்ஆன் ஷரீஃபை ஓதி முடித்தார்கள். அதனைத் தொடர்ந்து, புனித ராத்திபத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா மஜ்லிஸ் நடைபெற்றது. நிறைவில், புனித ரவ்ளா ஷரீபில் பூக்களும் நறுமணம் சமர்ப்பிக்கப்பட்டு, சங்கை செய்யப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அனைவருக்கும் காலை உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. காலை உணவுக்குப்பிறகு சரியாக 10.20 மணியளவில், சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல் மற்றும் மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியின் 12ஆவது மௌலவி – ஆலிம் யாஸீனிய் பட்டமளிப்புவிழா மற்றும் முதலாம் ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா ஆகிய முப்பெரும்விழா நிகழ்வுகள் முறைப்படி தொடங்கின.

**கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத் திருப்பேரர் சங்கைக்குரிய ஷைகு நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள்,** முப்பெரும்விழாவுக்குத் தலைமையேற்று நடத்தித் தருமாறு, கலீபா. ஆலிம் புலவர் எஸ்.ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள் முன்மொழிய, நிகழ்ச்சி நெறியாளர் மௌலவி. ஹாஃபிழ். வி.எம். முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் அதனை வழிமொழிந்தார்கள். சங்கைக்குரிய திருக்குடும்பத்தார்கள் முன்னிலை வகித்தார்கள். தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவின் கண்ணியத்திற்குரிய கலீபாப் பெருமக்கள் முன்வரிசையில் வீற்றிருந்தார்கள்.

**நிகழ்ச்சித் தொகுப்பாளர் மௌலவி.ஹாஃபிழ்.வி.எம்.முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் :** திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரி சார்பில், கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 34ஆம் தலைமுறைத் திருப்பேரர் – குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களது 40ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல், ஜாமிஆ யாஸீன் அறபுக் கல்லூரியின் 12ஆவது யாஸீனிய் ஆலிம் பட்டமளிப்பு விழா மற்றும் முதலாம் ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா ஆகிய முப்பெரும் விழாவுக்கு எங்கள் கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத் திருப்பேரரும் – நமது வாப்பா நாயகம் கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அழீம் அவர்களின் திருப்பேரருமான சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள் தலைமையேற்று வீற்றிருக்கிறார்கள்.

கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தங்களது திருப்பேரர் இமாம் ஹுஸைன் ரலியல்லாஹு அன்ஹு அவர்களைக் குறிப்பிடும்போது, நான் ஹுஸைனினின்றுமுள்ளவன் – ஹுஸைன்,என்னினின்றுமுள்ளவர் என்று அருளியுள்ளார்கள். பொதுவாக பாட்டனார்களுக்கும் பேரர்களுக்கும் இடையிலான பாசம், பந்தம் என்பது அலாதியானது. பிள்ளைகளைப் பெற்றோர் நேசிக்கத்தான் செய்வார்கள். ஆனால், அதைவிட அதிகமாகத் தங்களது பேரப்பிள்ளைகளை நேசிப்பார்கள். அந்த வகையில், நமது ஷைகு நாயகமவர்களின் அன்பையும் அருளையும் பெற்ற, கண்மணி நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் 36ஆம் தலைமுறைத் திருப்பேரரும் சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்கள் இப்புனித விழாவுக்குத் தலைமை ஏற்றிருக்கிறார்கள்.

அல்லாஹ் தன் திருமறையில், தமக்காக வாழாமல் நமக்காகவே வாழ்ந்தருளிய நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நம்மிடம் ஒரு விஷயத்தைக் கேட்கச் சொல்கின்றான். நபியே, நாயகமே... தாங்களின் வாணாள் சேவைக்காக தங்களது குடும்பத்தை நேசிப்பதைத் தவிர மக்களித்திடத்தில் வேறெதையும் கேட்க வேண்டாம் என்பதாகக் குறிப்பிடுகின்றான். நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் திருக்குடும்பத்தாராகிய அஹ்லுல் பைத்தினரை நேசிப்பது கடமை என்பதாக அல்லாஹ் நமக்குக் கட்டளையிடுகின்றான். அத்தகைய சிறப்பிற்கும் மேன்மைக்குரிய அஹ்லுல்பைத்தினர் முன்னிலை வகிக்க, இந்நிகழ்வின் தொடக்கமாக அருள்மறையாம் திருமறையின் திருவசனங்களை ஓதுவதற்கு, இன்று ஹாஃபில் பட்டம் பெறும் மாணவர் முஸம்மில் வருகின்றார்... என்பதாக நிகழ்ச்சி நெறியாளர் அழைப்பு விடுத்தார்.

ஹாஃபிழ் பட்டம் பெறும் மாணவர் முஸம்மில் அவர்களின் கிராஅத்தைத் தொடர்ந்து, மௌலவி ஸனது பெறும் மாணவர்கள் வஹ்தத்துல் வுஜூது என்னும் ஒரே உள்ளமை அறபுப் பாவைப் பாடி, தொடர்ந்து, நபிப்புகழ்ப்பா பாடினார்கள்.

**கலீபா.முனைவர்.Er.M.J.முஹம்மது இக்பால் B.E., M.B.A., F.I.E., Sr.MIEEE (USA), C.Engg., Ph.D., ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், துபை அவர்களின் வரவேற்புரை:**

இப்பொழுது நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல் நிகழ்ச்சி – மௌலவி யாஸீன் பட்டமளிப்பு விழா – ஹாஃபிழ் பட்டமளிப்பு விழா ஆகிய முப்பெரும்விழா நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நமது சங்கைக்குரிய ஷைகு நாயகம் அவர்களின் ஆருயிர் திருப்பேரர் சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின் அருள்நிறை ஆசிகளை வேண்டியவனாக எனது வரவேற்புரையை ஆரம்பம் செய்கின்றேன்.

இந்த நூற்றாண்டுக்கு நாமே உள்ளோம். இனிவரும் நூற்றாண்டுகளும் நமது பார்வையிலேயே நடைபெறும். இந்த ஜமானில் நம்மை அண்டியவர்கள் பெரும்பேறு பெற்றவர்கள். நம்மை அண்டாதவர்கள் கைசேதப்பட்டவர்கள். இதுவே ஹக்கின் பஷாரத்தாகும் – நன்மாராயமாகும் என்பதாக நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்கள் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்கள்.

அவர்களுடைய காலத்திலே உத்தமமான உயர்வான சத்தியமான வஹ்தத்துல் வுஜூத் என்னும் ஞானக் கருவூலத்தை உரியவருக்கு உரிய முறையில் வழங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக, அழகிய ஞானப்பேட்டை வாழையடி வாழையாக மென்மேலும் தொடரும் வண்ணம், தங்களது அருமைத் திருப்பேரரையே தங்களது உள்ரங்க வெளிரங்க வாரிசாக இஷாரா செய்து நமக்கு அடையாளம் காட்டித் தந்துள்ளார்கள்.

நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் முதன்முதலில் இந்தியாவிற்கு வந்த நிகழ்வை நினைத்துப் பார்க்கின்றேன். 1966ஆம் ஆண்டு, நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் இராமேஸ்வரம் துறைமுகத்தில் வாயிலாக இந்தியா வருகிறார்கள். அப்போது அவர்கள் கையில் இருப்பது லக்கேஜ் பையும் கொஞ்சம் இந்தியா பணமும் இலங்கைப் பணமும்தான். இராமேஸ்வரம் வந்தடைந்ததும் அங்கே உணவகத்தில் உணவும் நீரும் வாங்கி தாங்கள் கொண்டுவந்த தட்டு மற்றும் தம்ளரிலிட்டு பசியாறினார்கள். பின்னர், இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ் மூலம் திருச்சி வந்தடைந்தார்கள். திருச்சியில் அவர்களுக்குத் தெரிந்த ஒரே விவரம், பாலக்கரையில் உள்ள டாக்டர் பத்ருத்தீன் ஹாஜியார் இருக்கிறார் என்பது மட்டுமே. திருச்சி இரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே வந்து சைக்கிள் ரிக்ஷாவை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு, பாலக்கரைக்கு வருகிறார்கள். அங்கே டாக்டர் பத்ருத்தீன் அவர்களின் கிளினிக்குக்கு வந்தபோது, டாக்டர் அங்கே இல்லை. எங்கே இருப்பார் என்று விசாரித்தபோது ரேஸ்கோர்ஸ் பகுதியில் உள்ள அவர்களது இல்லத்திற்குச் சென்றால் பார்க்கலாம் என்ற தகவல் கிடைக்கிறது. அதே சைக்கிள் ரிக்ஷாவில் ரேஸ் கோர்ஸ் செல்கிறார்கள். ரிக்ஷாக்காரர் கேட்ட வழியைக் கொஞ்சம் மறந்து குறிப்பிட்ட வீட்டைக் கடந்து சென்று விடுகிறார். பின்னர் வழிப்போக்கர் ஒருவரிடம் யாஸீன் மன்ஜிலுக்கு வழி கேட்க, அவர் அடையாளம் காட்டியபடி அங்கே சென்று கேட் முன்பு அந்த சைக்கிள் ரிக்ஷா நிற்கிறது. அங்கே முற்றத்தில் சிலர் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது, வாசலில் சைக்கிள் ரிக்ஷா வந்து நிற்கவும், அவர்களில் கல்லூரியில் படிக்கும் இளவயதுப் பிள்ளையாக இருந்த நமது மரியாதைக்குரிய தியாகி கலீபா. சிராஜுத்தீன் அண்ணன் அவர்கள், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடம், யார் வேண்டும்? யாரென்று விசாரிக்கிறார்கள். அதற்கு ஷைகு நாயகமவர்கள், மௌலானா வீட்டுப்பிள்ளை வந்திருக்கின்றேன் என்று செய்தி சொல்லி அனுப்பினார்கள். அந்தச் செய்தியை முற்றத்திலிருந்தவர்களிடம் கலீபா சிராஜ் அண்ணன் ஓடிப்போய் சொல்ல,மௌலானா வீட்டுப் பிள்ளையா? உடனே அழைத்துவாருங்கள் என்று சொல்கிறார்கள். மேலும், அனைவரும் ஆனந்தக் கூத்தாடினார்கள். ஆனால், நமது ஷைகு நாயகமவர்களின் இயல்பு என்னவென்று நமக்குத் தெரியும். மிகவும் அமைதியாக, அடக்கமாக இருந்தார்கள். மௌலானா வீட்டுப் பிள்ளை, மௌலானா வீட்டுப் பிள்ளை என்று எல்லாரும் கொண்டாடுகிறார்கள். அப்போது, இராமேஸ்வரத்திலிருந்து, திருச்சி வந்து, பாலக்கரை சென்றதையும் அங்கிருந்து ரேஸ் கோர்ஸ் வந்ததையும் தெரிவிக்கிறார்கள். மேலும், எங்கள் தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா வைபவத்தில் கலந்து கொண்டு நடத்திட வந்தோம் என்பதாகத் தெரிவித்தார்கள்.

இதுதான் வரலாறு. சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் முதன்முதலாக இந்தியா வந்தது, தங்களது அருமைத் தந்தை நாயகம் நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா வைபவத்திற்காகத் தான். சங்கைக்குரிய குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், வெலிகமையிலிருந்து நிறைவாக இந்தியாவிற்குப் புறப்படும்போது, நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடம், அருமை மகனே... நான் வெலிகமையை விட்டு இந்தியாவிற்குப் புறப்படுகின்றேன். நீங்கள் இரண்டு திடுக்கங்களை எளிதாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அருளியதாக, நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களே அருளினார்கள். அந்த சமயத்தில் தான் நமது ஷைகு நாயகமவர்களின் மாமா சங்கைக்குரிய ஸக்கரிய்யா மௌலானா அவர்களின் மறைவுச் செய்தியும் அருமைத் தந்தை நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மறைவுச் செய்தியும் அடுத்தடுத்து வந்து சேர்கின்றன. தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டதும் ஒரு கணம் எனது இதயமே நின்றுவிட்டது போன்றது தோன்றியது, எங்களுக்கெல்லாம்.... என்பதாக நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்களே சொல்லிக்காட்டுகிறார்கள்.

அவர்களின் 40ஆம் நாள் நிகழ்விற்காக, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களை அப்போதிருந்த கலீபாப் பெருமக்கள் மற்றும் முக்கிய முரீதுப் பிள்ளைகள் அழைத்துக்கொண்டு, திருமுல்லைவாசல் சென்றார்கள். அங்கே மிகவும் சிறப்பாக, தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ஃபாத்திஹா வைபவத்தை மிகவும் சிறப்பாக நடத்தினார்கள்.

அந்தக் காலகட்டத்தில், நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் வட்டாரக் கல்வி அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். சங்கைக்குரிய ஷைகு நாயமவர்களின் நுணுக்கங்களையும் நுட்பங்களையும் அவதானித்த, தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கலீபாக்கள் மற்றும் மூத்த முரீதுப் பிள்ளைகள் அனைவரும், நமது ஷைகு நாயகமவர்களிடம் நீங்கள் இந்தியாவிற்குத் தொடர்ந்து விஜயம் செய்ய வேண்டும் என்று வேண்டிக் கொண்டபோது, பார்ப்போமே... செய்யலாமே என்று மட்டும் தனிநிகர் பதில்வந்தது. அதன்பிறகு 1970களில் வருடத்திற்கொருமுறை தங்கள் இந்திய விஜயத்தை அமைத்துக் கொண்டார்கள்.

அதுமுதல், 1970களிலும், 1980களிலும் மறைந்த கலீபா. மௌலவி. எஸ். அப்துல் கரீம் ஜமாலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களுக்கு, நமது ஷைகு நாயகமவர்கள் எழுதிய பட்டோலைகளையெல்லாம் பார்ப்போமேயானால், அதில் எவ்வளவோ ஞானக் கருத்துகளும் உள்ரங்க – வெளிரங்க இரகசியங்களும் பொதிந்து கிடக்கின்றன என்பதை நாம் உணர முடியும். அந்தப் பட்டோலைகளெல்லாம் வரலாற்றின் பொன்னேட்டில் பொறிக்கப்பட வேண்டியவை. பாதுகாக்கப்பட வேண்டியவை. இந்தக் காலத்திற்கும் எந்தக் காலத்திற்கும் பொருந்தக்கூடியவை. அவற்றையெல்லாம் சங்கைக்குரிய திருக்குடும்பத்தாரின் உத்தரவுக்கிணங்கி, ஆவணப்படுத்தப்பட வேண்டும் என அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் தங்களது அந்திமக் காலங்களில், கலீபா. எஸ். அப்துல் கரீம் ஜமாலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களிடம், உங்களது கைரான சிர்ரான விஷயங்களுக்கெல்லாம் எங்களது இளைய மகனார் கலீல் அவ்ன் மௌலானா அவர்களைக் கரம் பிடித்துக் கொள்ளுங்கள் என்பதாக இஷாரா செய்துள்ளார்கள். இஷாராவோடு நின்று விடாமல், பட்டவர்த்தனமாக அறிவிக்கவும் செய்தார்கள். அந்த விஷயங்களையும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடம் எத்திவைத்து, அடிக்கடி இந்தியா வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டபோதும்… .சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் பார்ப்போமே என்றுதான் கூறினார்கள்.

அதன்பிறகு, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுடன் அதிகமான கடிதப்போக்குவரத்து செய்து, பட்டோலைகளைப் பெற்ற வந்த இருந்த கலீபா.எஸ். அப்துல் கரீம் ஜமாலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் முன்னதாக கண்ணாடி வலியுல்லாஹ் மஹானாந்த பாபா ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடமும், சங்கைக்குரிய குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களிடமும் பைஅத் பெற்றிருந்தார்கள். அதன்பின் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடமும் பைஅத் பெற்றார்கள். ஒருமுறை அவர்களுக்கு மனதில் ஓர் ஐயம் ஏற்பட்டது… அதாவது, கஷ்டமான – சிரமமான காலங்களில் உதவிக்கு மூன்று தர்பார்களில் யாரை அழைப்பது? என்பது தான் அவர்களது ஐயப்பாடு. இதுகுறித்து யாரிடமும் கேட்காமல் தங்கள் மனதுக்குள்ளேயே அசைபோட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில், சங்கைக்குரிய நாயகமவர்களிடமிருந்து பட்டோலையொன்று வருகின்றது. அதில், ஏற்கனவே பெற்ற கடிதத்திற்கு பதில் எழுதிய சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள், இடையில் அந்தச் செய்திகளை நிறுத்திவிட்டு, நமக்கு வாரிதாத்தாக வரக்கூடிய ஒரு விஷயத்தை இங்கே எழுதுகிறோம் என்று கூறி… சினபல கொண்ட தாக்கை சீரதற்குண்டு நாமம் நினைவிற் கொள்ளுதற்கு நிறுத்துக கலீல்தனை என்பதையாம் என்பதாக எழுதி, பின் தொடர்ந்து வேறு செய்திகளுடன் பட்டோலை வந்திருந்தது.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் சொல்வார்கள் : சென்றவர்களை எம்மில் காணுங்கள். வருபவர்களும் நாமே யாவோம். இதிலேயே எல்லா இரகசியங்களுமே முடிந்துவிட்டது. மேலும், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் சொல்கிறார்கள் : நாம் இரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பிள்ளை, முஹிய்யுத்தீன் ஆண்டகை கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களின் பிள்ளை, முஹிய்யுத்தீனிய அரவணைப்பில் உள்ளோம். ஏகத்துவ வாள் எம் கையில் உள்ளது. எதிரிகளை ஒழிப்போம். ஜகத்தினில் சத்தியத்தைப் பரப்புவோம். சென்றவர்களை எம்மில் காணுங்கள். வருபவர்களும் நாமே யாவோம் என்பதாக அருளுகிறார்கள்.

1970களின் பிற்பகுதியிலே... தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவும் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையும் மெல்ல மெல்ல வளர்ச்சி வரும்காலை, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் வழங்கிய வஹ்தத்துல் வுஜூதின் உன்னத விளக்கங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளாமல், உலமாக்கள் கூறிய எதிர்மறை விமர்சனங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அவர்களின் விமர்சனக் கணைகளைப் பொறுத்துக் கொள்ள முடியாத சபையில் உள்ள ஆலிம் பெருமக்களும், ஆத்தும சகோதரர்களும் பொங்கி எழுகிறார்கள். ஆனால், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், இரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், அவர்கள் தம் திருக்குடும்பத்தாருக்கும் இதுபோன்ற எதிர்ப்புகள் வரத்தான் செய்யும். எனினும், காலப்போக்கில் அவை காணாமற்போய் விடும் என்பதாகக் கூறி, பொறுமையாக இருங்கள் கூறி, மேலும் விமர்சனங்களுக்குச் சரியான முறையில் பதில் கொடுக்கவும் ஆணையிடுகிறார்கள். அந்த இக்கட்டான சூழலிலும் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் நிபுணத்துவமான அணுகுமுறையாலும் மகோன்னத வெளிப்பாடுகளாலும், அவர்களது வஹ்தத்துல் வுஜூத் கோட்பாடுகள் தொடர்ந்து வெளிவந்த மிருந்தன. வெற்றியும் பெற்றன. சங்கைக்குரிய ஷைகு நாயமவர்களின் வஹ்தத்துல் வுஜூத் கோட்பாடுகள் குறித்து, எதிர்மறையாக பிரம்மாண்டப்படுத்தி ஒரு பத்திரிகையில் எழுதியிருந்தார்கள். அவர்கள் மேல் வழக்குத் தொடரப்பட்டது. அதில் வெற்றியும் கண்டோம். அந்தப் பத்திரிகையாசிரியரிடம் அவரது கடைசிக் காலத்தில் எடுத்த பேட்டியில், உங்கள் வாழ்க்கையில் எந்தக் காலத்தில் மிகவும் சிரமப்பட்டதாக உணர்கிறீர்கள் எனக் கேட்கப்பட்டது. அதற்கு அவர், இலங்கையிலிருந்து வந்த கலீல் அவ்ன் மௌலானா அவர்கள் பற்றி அவதூறாக எழுதியதனால், நான் பட்ட மனவேதனைகள், அவஸ்தைகள் கொஞ்சநஞ்சமல்ல.... என்று குறிப்பிட்டுச் சொன்னார். இதை எதற்குச் சொல்கிறேன் என்றால், சத்தியம் என்றும் வென்றே தீரும்.

நமது ஆருயிர் ஷைகு நாயகமவர்கள், அவர்களது கொள்கை கோட்பாடுகளில் எப்போதும் நோ காம்ப்ரமைஸ் தான். வஹ்தத்துல் வுஜூத் கொள்கையில் என்றைக்கும் காம்ப்ரமைஸ் பண்ணியதே கிடையாது. ஏனென்றால், அவர்கள் அதாகவே இருக்கின்றார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

கடந்த வாரம் நாம் இலங்கை சென்றிருந்தேன். அப்போது, கொழும்பு மீடியா ஃபோரம் மூலம் என்னை ஒரு பேட்டி எடுத்திருந்தார்கள். அந்தப் பேட்டியில், நீங்கள் உங்கள் ஷைகு நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு வந்துள்ளீர்கள். அவர்களது மாணவனாக நீங்கள் பெற்றுக் கொண்டதென்ன ? என்பதாகக் கேட்டார்கள். நான் சொன்னேன்.... நான் முஸ்லிமாக இருக்கின்றேன் அல்லவா அதுதான் என்றேன். அவருக்குப் புரியவில்லை. நான் விளக்கினேன், எங்கள் ஆருயிர் ஷைகு நாயகமவர்கள் எங்களுக்கு 5 வேளை தொழுகையை நிறைவேற்றச் சொல்லியுள்ளார்கள். தினமும் சுபுஹு தொழுகைக்குப் பிறகு திருக்குர்ஆன் ஷரீஃபை நியமமாக ஓதி வரக்கூறியுள்ளார்கள். மேலும், மாதந்தோறும் 14ஆவது பிறையில் ராத்திபு மஜ்லிஸில் கலந்து கொள்ளச் சொல்லியுள்ளார்கள். மாதமொருமுறை குடும்பமாகக் கூட்டமாக ஒன்றுகூடி ஞானவிளக்கங்களைப் பேசிப் பரிமாறிக் கொள்ளுங்கள் இஸ்லாத்தின் ஏவல் – விலக்கங்களைக் கடைப்பிடித்துக் கொள்ளுங்கள்.... என்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு அதிர்ச்சி; ஆனால், இங்கே உங்கள் ஷைகு நாயகமவர்களைப் பற்றி, கொழும்புவிலும் இன்னும் இன்னும் பல ஊர்களிலும் எதிர்மறையாக விமர்சிக்கிறார்களே... என்றார். அவர்களெல்லாம் அறிவீனர்கள். நேரில் வந்து பார்க்கமால், தீர ஆராயாமல் தங்கள் கற்பனைகளால் இட்டுக் கட்டிக் கூறுகிறார்கள் என்று நான் தெரிவித்தேன்.

அதன்பின், கொழும்பிலிருந்து வெலிகமைக்குப் புறப்படும்போது நாங்கள் ஐந்து பேர் தான் வருவதாக இருந்தது. ஆனால், அப்போது வேனில் இடம் போதாத அளவுக்குப் பத்துக்கும் மேற்பட்டோர் அதில் ஏறிக் கொண்டார்கள். அவ்வாறு வந்தவர்கள் நிகழ்ச்சிக்குப் பின்னர் சொன்னார்கள் : நாங்கள் ஏன் இந்த 40ஆம் நாள் ஃபாத்திஹா – நினைவேந்தல் நிகழ்ச்சிக்கு வந்தோம்? சங்கைக்குரிய கலீல் அவ்ன் மௌலானா நாயகத்தைப் பற்றி பலவிதமான எதிர்மறை விமர்சனங்கள் இருந்து கொண்டே இருக்கின்றன. எனினும், சமீப காலங்களில் அவர்களைப் பற்றிய மகோன்னதமான விஷயங்கள், வரலாறுகள், அவர்களது ஆக்கங்கள் – வெளிப்பாடுகள் பற்றிய குறிப்புகள் பத்திரிகைகள் மற்றும் இதழ்களில் பிரசுரிக்கப்படுவதையும் கண்டு வருகிறோம். எனவே, உண்மையில் என்னதான் நடக்கிறது? என்பதைத் தெரிந்து கொள்ளவே இங்கு வந்தோம். இதுவரை சங்கைக்குரிய கலீல் அவ்ன் மௌலானா நாயகத்தைப் பற்றிப் பரப்பப்பட்ட பலவிதமான அவதூறான விஷயங்கள் அத்தனையும் பொய். அவற்றில் 0.000001% கூட உண்மையில்லை என்பதைப் புரிந்து கொண்டாம். உண்மையான விளக்கங்களை அவர்களுடைய பிள்ளைகளுக்குப் போதித்திருக்கிறார்கள். சரியான சத்தியத்தை அவர்களுடைய பிள்ளைகள் விளங்கி இருக்கின்றார்கள். அவர்களது காலத்தில் அவர்களைக் காணாமல் மிஸ் பண்ணிவிட்டோம். நிச்சயமாக நாங்கள் துரதிர்ஷ்டசாலிகள் என்று அவர்கள் தெரிவித்தார்கள். அப்போது நாங்கள், எங்கள் ஷைகு நாயகமவர்கள்

தங்களது ஆக்கங்களை எங்களுக்கு அருளிச் சென்றுள்ளார்கள். அவற்றைத் தொடர்ந்து வாருங்கள். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் அருமைத் திருப்பேரர் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் அலி மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல ஹாஷிமிய் நாயகமவர்களின் தொடர்பில் இருங்கள். நிச்சயமாகப் பாக்கியம் பெற்றுக் கொள்வீர்கள் என்று கூறினோம்.

நிறைவாக, ஒரேயொரு விஷயத்தை மட்டும் கூறி எனது வரவேற்புரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

1980களில் சிறியதொரு தர்ஹாவாகத் தான் திருமுல்லைவாசலில் இருந்தது. அதனை அழகான முறையில் விரிவுபடுத்தி, இரம்மியமான நல்லதொரு பாங்கில் தர்ஹாவை அமைத்து, இப்போது கந்தூரி சமயத்தில் ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிறது.

அதேபோன்று, சம்பைப்பட்டினத்தில், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் தங்களது பாட்டனார் சம்பை அப்பா நாயகம் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் ரவ்ளா ஷரீஃப் இருந்த இடத்தை அடையாளம் கண்டு, அதனையும் எழிலுற தர்ஹாவாக வடிவமைத்து, வசந்தம் வீசும் ஜமாலிய்யா தோட்டமாக அமைத்துக் கொடுத்துள்ளார்கள்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் தங்களது தந்தை நாயகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும், தங்களது பாட்டனார் ஜமாலிய்யா மௌலானா ரலியல்லாஹு அன்ஹு அவர்களுக்கும் உரிய கடமையைச் செவ்வனே செய்து முடித்துள்ளார்கள். அத்துடன், ஆத்துமப் பிள்ளைகளாகிய நாம் ஆத்துமார்த்தமான முறையில் நமது நாட்டதேட்டங்களையும் ஞானத் தேடல்களையும் அடைந்து கொள்ளும் கருவூலங்களாகவும் அவற்றை அமைத்துக் கொடுத்துள்ளார்கள். இந்தியாவில் அவர்கள் அமைவிடம் அமைந்தால், எப்போதும் முரீதுப் பிள்ளைகள் தங்களை வந்து தரிசித்து ஆசி பெற்றுக் கொள்ளலாம் என, திருச்சியில் திரு இல்லத்தையும் அமைத்துக் கொடுத்தார்கள்.

அடுத்ததாக, நாயகவமர்கள் 1991-92ஆம் ஆண்டு வாக்கில், எனக்குத் திடீரென ஒரு போன் வந்தது. இன்ஜினீயர் சென்னைக்குக் கிளம்பி வாருங்கள் என்று அழைப்பு விடுக்கப்பட்டது. அங்கே வந்தால், சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுடன் கலீபாப் பெருமக்கள் மற்றும் முக்கியமான முரீதுப்பிள்ளைகள் சூழ இருக்கின்றார்கள். அப்போதுதான் திருச்சியில் இன்ன இடத்தில் இந்த மதுரஸாவை ஸ்தாபிக்க உள்ளோம் என்பதாக ஷைகு நாயகமவர்கள் அறிவித்தார்கள். அதைத்தொடர்ந்து, அதற்குரிய பணிகள் நடைபெற்று, 1994ஆம் ஆண்டு மதுரஸாவும் தொடங்கப்பட்டது. மதுரஸாதான் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் உயிர்மூச்சாக இருந்தது. மதுரஸா மாணவர்களுக்கு ஈருலகக் கல்வியையும் ஒருசேர வழங்க வேண்டும். அதனுடன்

வஹ்தத்துல் வுஜூதைப் போதிக்க வேண்டும். மற்ற மாணவர்களைப் போல் மதுரஸா மாணவர்களும் அனைத்துத் திறன்களும் பெற்றுச் சமுதாயத்தில் சிறப்பாகத் திகழ வேண்டும்... ஆகிய உயரிய நோக்கங்களோடு மதுரஸாவை நிர்மாணம் செய்தார்கள். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் சொன்னதைப் போல், அல்லாஹ்வின் பெயரைக் கொண்டு, தொடங்குங்கள். ஹக்கு சுபுஹானஹுதஆலாஅதை நிறைவு செய்து தருவான் என்பார்கள். அதைப்போன்று உதித்தது தான்இந்த மதுரஸா.

அதன் பிறகு, உலகக் கல்விக்கூடத்தை தனித்தன்மையோடு வழங்க வேண்டும் என்று நினைத்தார்கள். அதன் காரணமாக, அவ்னிய்யா பப்ளிக் ஸ்கூல் உருவாக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது. இந்த இடம் மதீனத்துல் இல்மாகத் திகழ்கின்றது. இந்தப் பெரிய இடம் பல்கலைக் கழகமாகத் திகழ வேண்டும் என்பது ஷைகு நாயகமவர்களின் பேரவா. இந்த மதுரஸாவின் இடத்தில், பலவிதமான நிபுணத்துவம் – தொழில்நுட்பம் சார்ந்த கல்வி நிலையங்கள் எல்லாம் உருவாகும். எதிர்காலக் கண்ணோட்டத்தோடு சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் நமக்கு அவர்களை தொலைநோக்குப் பார்வையைக் கூறியிருக்கிறார்கள். அந்தப் பாதையில் பயணித்து வெற்றி எட்ட வேண்டியது நமது கடமையாக இருக்கின்றது.

நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், தங்களது தந்தை நாயகமவர்களுக்கு, தங்களது அப்பா நாயகமவர்களுக்கு, தங்களது முரீதுப் பிள்ளைகளுக்கு மேலும் கல்விக்காகவும் செய்ய வேண்டிய கடமைகளையும் சேவைகளையும் செவ்வனே ஆற்றியுள்ளார்கள். கல்விக்காக உயிர் கொடுப்பது என்று சொல்வார்கள். நான் கொஞ்சம் இங்கே கலோக்கியலாகத் தான் சொல்கிறேன்.... சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் உயிர் மூச்சாக இருந்த மதுரஸா மண்ணில் தங்களது திருவுடலையும் தந்தருளியுள்ளார்கள். எனினும், என்றும் அவர்கள் கைய்யுல் கையூமாகவே தான் நம்முடன் இருக்கின்றார்கள்.

நமது சங்கைக்குரிய சின்ன வாப்பா நாயகமவர்கள், தங்களது அருமைத் தாயார் வயிற்றில் கருவுற்றிருந்த சமயம். அப்போது, ஹஜ்ஜுக்குச் சென்ற ஒருவர் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைத் தரிசித்து ஆசி பெற வந்துள்ளார். அப்போது, அங்கிருந்து வாங்கி வந்த பொருட்களைக் காணிக்கையாகச் சமர்ப்பித்துள்ளார். அவற்றில் ஒரு தொப்பியும் இருந்துள்ளது. அதைக் கண்ணுற்ற சங்கைக்குரிய சின்ன வாப்பா நாயகமவர்களின் மூத்த சகோதரி அவர்கள், இந்தத் தொப்பி என் தம்பிக்கு என எடுத்து வைத்துக் கொள்கிறார்கள். எப்படிம்மா, இன்னும் குழந்தை பிறக்கவே இல்லையே என்று கேட்க, இல்லை இல்லை எனக்குத் தம்பி தான் பிறப்பார். அவருக்கு இந்தத் தொப்பியை அணிவிப்பேன் என்பதாக எடுத்து வைத்துக் கொள்கிறார்கள். இத்தனைக்கும் அந்தக் காலத்தில் இலங்கையில் ஸ்கேனிங் பார்க்கும் வசதிகள் கூட இல்லாத காலமாகும்.

இனிதான் விசேஷமான விஷயமே இருக்கின்றது. சிறிது காலத்தில், அம்மையாருக்குப் பிரசவ வலி ஏற்பட்டதும், அனைவரும் அவசரமாக வேனில் கிளம்பிக் கொண்டிருந்த சமயம். அவ்வளவு அவசரத்தின் போதும் சங்கைக்குரிய சின்ன வாப்பா நாயகமவர்களின் அருமைச் சகோதரியார் அவர்கள், அப்பா..அப்பா.., தம்பிக்கு அணிவிக்க அந்தத் தொப்பியை எடுத்து வாருங்கள் என்று கேட்டுக் கொள்ள, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களும் தங்களது திருப்பேத்தியாரின் கனிவான வேண்டுதலை கவனத்திற் கொண்டு, வீட்டினுள் சென்று அந்தத் தொப்பியை எடுத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குச் சென்றார்கள். குழந்தையும் இனிதே பிறந்தது. பாங்கு சொல்லி ஓதி முடித்தபின் சங்கைக்குரிய சின்ன வாப்பா நாயகமாகிய அன்று பிறந்த அழகிய பாலகருக்கு அந்தத் தொப்பியை ஆசைதீர அணிவித்து அழகு பார்த்தார்கள்.

சங்கைக்குரிய சின்ன வாப்பா நாயகமவர்கள், இப்போதல்ல... இன்னும் சிறு வயதிலிருக்கும்போது, இன்னும் சிறுவயதிலிருக்கும்போது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களைத் தரிசிக்க நாங்கள் சென்றிருப்போம். அப்போது நாங்கள் இருக்கும் அறைக்கு குழந்தைப் பருவத்திலிருந்த சின்ன வாப்பா நாயகமவர்கள் வந்தாலே நாங்கள் அனைவரும் எழுந்து விடுவோம். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், சின்ன வாப்பா நாயகமவர்களைப் பற்றி, இவர் விவரமுள்ளவர் இன்ஜினீயர் என்று சொல்வார்கள். அதெல்லாம் ஜீன்ஸிலிருந்து வருவது. எப்போது அது வெளிவரும்; எப்போது அதனை வெளிப்படுத்தும் என்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

அவர்களது நிழலிலேயே நம்மை இளைப்பாறச் செய்யும் வண்ணம், அவர்களது அருமைத் திருப்பேரர் அவர்களை அடையாளம் காட்டிவிட்டு, எப்போதும் நம்முடனே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் ஆசி எப்போதும் நமக்கு இருக்கும் என்று கூறி, இவ்விழாவிற்கு வருகை தந்திருக்கும் சிறப்புப் பேச்சாளர்கள், ஜியாவுத்தீன் ஆலிம் பாகவி ஹள்ரத் அவர்களையும் முஹம்மது அபுதாஹிர் ஆலிம் பாகவி ஹள்ரத் அவர்களையும் ஷைகு அப்துல்லாஹ் ஜமாலி ஹள்ரத் அவர்களையும் இலங்கையிலிருந்து வந்திருக்கும் முரீதுப் பிள்ளைகளையும் கலீபாக்கள், முரீதுகள், அன்பர்கள், அஹ்பாபுகள் அனைவரையும் வரவேற்று, அனைத்திற்கும் மேலாக, சங்கைக்குரிய திருக்குடும்பத்தார் வருகை புரிந்துள்ளார்கள். அவர்கள் அனைவரையும் வரவேற்று ஆசிகளை வேண்டியவனாய் நிறைவு செய்கின்றேன்.

நிகழ்ச்சி நெறியாளர், **மௌலவி. வி.எம். முஹம்மது ஹஸன் ஆலிம் யாஸீனிய் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்** வாழ்த்துரை வழங்க வருமாறு, **திருச்சி தியாகி. கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களை அழைக்க.... **கலீபா. ஆலிம் புலவர் எஸ். ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள் :** வருக! வருக! தியாகி சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களே...

சிராஜ் அண்ணன் அவர்களுக்குப் பேச 7 மணி நேரம் கொடுத்தாலும் போதாது. அவர்களது வாழ்க்கையே சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் தாம். அப்படியிருக்க, அவர்களிடம் இப்போது நான் 7 நிமிடங்களில் வாழ்த்துரையை நிறைவு செய்து கொள்ளுமாறு தெரிவித்தால், என்மீது கோபம் வரலாம். எனினும் நேரத்தின் அருமை கருதி சிறப்பிற்குரிய தியாகி அவர்களைப் பேச வருமாறு அழைக்கின்றோம்.

**திருச்சி தியாகி. கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களின் வாழ்த்துரை :**

இங்கு நம்முன்னே தலைமை தாங்கி அமர்ந்திருக்கக்கூடிய நமது ஷைகு நாயகமவர்களின் திருப்பாதங்களை முத்தமிட்டவனாகத் தொடங்குகின்றேன். முன்னிலை வகிக்கக்கூடிய சங்கைக்குரிய திருக்குடும்பத்தாருக்கும், சிறப்புரையாற்ற வந்துள்ள ஆலிம் பெருமக்களுக்கும், கலீபாப் பெருமக்களுக்கும், முரீதுப்பிள்ளைகள், அஹ்பாபுகளுக்கும், மதுரஸா ஆசிரியப் பெருமக்களுக்கும் மதுரஸா மாணவர்களுக்கும் மதுரஸா முதல்வர் மற்றும் அனைவருக்கும் எனது ஸலாத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

நான் இங்கு அதிக நேரம் பேசச் சந்தர்ப்பம் இல்லை. இரண்டே இரண்டு விஷயங்களை மட்டும் கூறி எனது வாழ்த்துரையை முடித்துக் கொள்ள ஆசைப்படுகின்றேன்.

நமது ஷைகு நாயகமவர்கள், தங்களது தந்தை நாயகம் சங்கைக்குரிய ஜமாலிய்யா அஸ்ஸய்யித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின் 40ஆம் நாள் ஃபாத்திஹாவிற்காக முதன் முதலில் இந்தியாவிட்டுப் பின்னர் இலங்கைக்குச் சென்று விடுகிறார்கள். பின்னர், அங்கிருந்து பட்டோலையொன்று எழுதுகிறார்கள். அதில், பிள்ளையே, யாவும் சீனும் மறைந்து வேறொன்று தோன்றியிருப்பதால், யாவும் சீனும் என்றென்றும் நிலைத்திருக்கும் என்று எழுதியிருந்தார்கள். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் எழுதக்கூடிய கடிதங்களை சங்கை கருதி நாங்கள் பட்டோலை என்று தான் அழைத்து வந்தோம். மறைந்த நாட்டாண்மைக்காரர், புரொபசர் கனி, நான் உள்பட நாயகமவர்களிடமிருந்து வரும் பட்டோலையில் உள்ள விஷயங்களைப் பரிமாறிக் கொள்வது வழக்கம். அதன்படி, இந்தப் பட்டோலையை நான் முதன்முதலில் நாட்டாண்மைக்காரரிடம் தான் காண்பித்தேன். அப்போது அவர்கள் என்னிடம், இது விளங்குகிறதா? இது விளங்குகிறதா? யாரைச் சொல்கிறார்கள் என்று புரிகிறதா? என்று கேட்டார்கள். நான் தெரிகிறது என்று கூறினேன்.

யாவும் சீனும் மறைந்து வேறொன்று தோன்றியிருப்பதால், யாவும் சீனும்என்றென்றும் நிலைத்திருக்கும் என்று நமது ஷைகு நாயகமவர்கள்

அருளியுள்ளார்கள். அதே ஷைகு நாயகம் தான் இன்று நம்முன்னாலும் வீற்றிருக்கிறார்கள். தாம் மறைந்தாலும் தங்களுடைய முழுத் தோன்றலாக – முழு அவதாரமாக அவர்களை அருமைப் பேரப்பிள்ளையைத் தந்திருக்கின்றார்கள். இந்த நேரத்தில் உங்கள் அனைவரிடத்திலும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது, நமது ஷைகு நாயகமவர்கள் எமக்குப் பின்னாடி இவர் தான் என்று அறுதியிட்டுக் கூறியபிறகு நமது வாப்பா நாயகமவர்களின் சொன்ன வாக்கினைத் தலைமேற்கொண்டு இங்கு வீற்றிருக்கக்கூடிய உயிரினும் மேலான ஷைகு நாயகமவர்களை இனி வாப்பா நாயகம் என்று தான் சொல்ல வேண்டும்; ஷைகு நாயகம் என்று அழைக்க வேண்டும். தயவு செய்து அதற்கு மாற்றமாக வேறு விதமாக அழைப்பதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. அதை என்னால் தாங்கிக் கொள்ளவும் முடியாது. எப்படி நமது கண்மணி ஷைகு நாயகமவர்களுக்கு மரியாதை செய்தோமோ, சங்கை செய்தோமோ, எப்படி பாதமுத்தி செய்தோமோ, எப்படி காணிக்கைகள் செலுத்தினோமோ எப்படி எப்படியெல்லாம் கவுரவித்து மகிழ்ந்தோமோ, அதிலே சிறிதும் குறைவு படாமல் – இன்னும் கூடுதலாக சங்கையையும் மரியாதையையும் அவர்களுக்குத் தந்து அவர்களது அன்பையும் ஆசியையும் பெற்று இம்மையிலும் மறுமையிலும் நாம் சிறந்து வாழ்வதற்கு, அல்லாஹ் நமக்கு நற்பேறு அருள வேண்டும் என வேண்டிக் கொள்கின்றேன்.

இன்னொரு செய்தி, ஆரம்பக் காலத்தில் நமது ஷைகு நாயகமவர்கள் தொடர்ந்து இந்திய விஜயம் செய்ய வேண்டும் என வேண்டிக் கொண்டபோது, நாம் வேலையில் இருக்கின்றோம். பெரிய லீவு போட முடியாது. இன்ஷா அல்லாஹ், ரமளானில் வருகிறோம் என்று சொன்னார்கள். அதைப்போல, ரமளான் மாதம் இந்திய விஜயம் மேற்கொள்வார்கள். பெருநாளுக்கு முன்னர் இலங்கைப் பயணம் மேற்கொண்டு விடுவார்கள். அதன்படி, அவர்கள் இந்திய விஜயத்தின்போது, ரமளான் பிறை பிறப்பதற்கு 10 நாட்களுக்கு முன்னர் பட்டோலை வந்துவிடும். நாங்கள் இன்ன தேதியில் இந்தியா வந்து விடுகின்றோம் என்று அதில் அறிவிப்புச் செய்து விடுவார்கள். அதற்குத் தகுந்தவாறு பயணத்திட்டங்களை நாங்கள் வகுத்துக் கொள்வோம். அதுபோன்று ஒருமுறை, ரமளானுக்கு இன்னும் 10க்கும் குறைவான நாட்களே உள்ளன. ஆனால், பட்டோலை கிடைக்கப் பெறவில்லை. எங்களுக்கெல்லாம் இருப்புக் கொள்ளவில்லை. அதன்பிறகு, ஓரிரு நாட்களில் வாப்பா நாயகமவர்களிடமிருந்து பட்டோலை விவரம் உள்ளிட்ட தகவல்களை எழுதி அனுப்பி இருந்தார்கள். அதில் கடைசியாக, சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் இப்படி எழுதியிருந்தார்கள் : உங்களுக்குத் தகவல் தர காலம் சுணங்கி விட்டது. கால தாமதமாகிவிட்டது. காரணம் என்னவென்றால், கண்டியில் முஸ்லிம் ஹோட்டல் என்று ஒன்று உள்ளது. சாதாரண டீ கடை வைத்திருந்த அவர்களை, அப்பா நாயகமவர்கள் அங்குச் சென்று டீ பருகியதாலேயேயும் அங்கிருந்ததனாலேயும்அது மிகப்பெரிய வளர்ச்சி பெற்றது. கண்டி முஸ்லிம் ஹோட்டல் என்றால் இலங்கையில்

தெரியாத ஆள் இல்லை என்ற அளவுக்குப் பிரபலமான பெரிய வளர்ச்சியடைந்தது. அங்கு வேலை செய்த ஹுஸைன் என்பவர் தான் சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களுக்காக கொழும்புக்குச் சென்று விமான டிக்கெட் – விசா எடுத்துத் தருகிற பணிகளைச் செய்பவர். அவர் இந்தமுறை வரத் தாமதமாயிற்று. வரவே இல்லை. அதனால், நாமே சென்று செய்துவிடலாம் என்றெண்ணி, நாங்களே கொழும்பு சென்று பயணத்திற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டோம். இனி யாரும் தேவையில்லை. இந்த ஏற்பாடுகளை நாமே செய்து கொள்வோம்.... என்று எழுதிவிட்டுத் தொடர்ந்து எழுதுகிறார்கள் : நாங்கள் பயண ஏற்பாடுகளெல்லாம் செய்துவிட்டபின்னர் அந்த ஹுஸைனிடமிருந்து கடிதமொன்று வந்தது. அதில் அவன், நான் அஜ்மீருக்குப் போயிருந்தேன். அதனால் தங்களுக்கு டிக்கெட் – விசா எடுக்கும் பணிகளுக்காக வழக்கம்போல் வரமுடியவில்லை என்று எழுதியுள்ளான். அஜ்மீருக்குப் போறானாம். அஜ்மீருக்கு! அஜ்மீராகவே நாம் இங்கு வீற்றிருக்கிறோம். இவன் அஜ்மீருக்குப் போய் யாரைக் காண்பான்....? என்று எழுதிவிட்டு, அதற்குக் கீழே பட்டோலையில் மேலும் எழுதுகிறார்கள் : மறைந்தவர்களை என்னில் பாருங்கள். என்னை மறைந்தவர்களில் பாருங்கள்.

இந்த அற்புதமான பட்டோலைகளெல்லாம் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன. இதை யார் சொல்கிறார்கள். நமது ஷைகு நாயகமவர்கள் நம்மிடம் சொல்கிறார்கள். அதே ஷைகு நாயகமவர்கள் தான் இப்பவும் அதே கருத்தைச் சொல்வதாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். எனவே, மறைந்தவர்களை இப்போது நம்மோடு இருக்கக்கூடிய ஷைகு நாயகமவர்களிடம் தான் நாம் காண வேண்டும். இதுதான் நிதர்சனம், இதுதான் உண்மை. இதுதான் சத்தியம். அதனால், இதனை நீங்கள் யாரும் உதாசீனம் செய்துவிட வேண்டாம். நாம் முன்னே இருக்கும் வாப்பா நாயகமவர்களை, வேறு எந்தப் பெயர் கொண்டும் அழைத்துவிட வேண்டாம். வாப்பா நாயகம் என்றால் வாப்பா நாயகம் தான். அவர்கள் தாம் நமக்கு வாப்பா நாயகம். அவர்கள் தாம் நமக்கு ஷைகு நாயகம். இதைத்தவிர வேறு எந்த வகையிலும் அவர்களை அழைக்கக்கூடாது. இதுவரை அவ்வாறு அழைத்திருந்தாலும் அதனை இனி தொடரக்கூடாது. வாப்பா நாயகம் என்று தான் மனதார அழைக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அதனையேவம்சாவழியிலே வந்தோர் அத்தனைபேரும் வலிமார்கள்தான். பெரும்பேறு பெற்ற குத்புமார்கள் அவர்களில் பெரும்பாலோனோர் இருக்கின்றனர்.

இந்த இடத்தில் இன்னொரு விசயத்தைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இப்போது நம் முன்னே முன்னிலையிலே வீற்றிருக்கின்றார்களே, திருக்குடும்பத்தார் ஒவ்வொருவரும் வலிமார்கள் தாம். யாரையும் சாதாரணமாக நினைத்துவிட வேண்டாம். மௌலானாமார்களுக்கு கை கொடுக்கின்றேன் என்ற பெயரில் பட்டும் படாமல் கை உங்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன். இரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு

அலைஹி வஸல்லம் அவர்களின் கொடுத்துவிட்டுப் போய் விட வேண்டாம். அவர்கள் அனைவரும் விலாயத்துடைய மனிதர்கள். வரவேற்புரையில் தம்பி இக்பால் கூறியதுபோன்று, சின்னக் குழந்தையாக இருக்கும்போதே வாப்பா நாயகமவர்களின் அருமைச் சகோதரி அவர்கள் கூறிய விசயத்தை நாம் கேட்டோம். ஆகவே, வயது வேறுபாடின்றி திருக்குடும்பத்தார் அனைவருமே விலாயத்தை உடையவர்கள் தாம். அதனை நாம் எப்போதும் மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்களின் அன்பும் ஆதரவும் உதவியும் கண்காணிப்பும் நம் அனைவருக்கும் நிலைத்து நிற்க வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன். நன்றி. வஸ்ஸலாம்.

## FORM OF DECLARATION

## FORM - IV

| | | |
|---|---|---|
| 1. Place of Publication | : | Fakira Complex<br>74, Palani Road, Dindigul - 624 001. |
| 2. Periodicity of its publication | : | Monthly |
| 3. Printer's Name | : | R. Vijayalakshmi |
| Nationality | : | Indian |
| Address | : | Sri Aggni Amman Printers<br>52, Palani Road, Dindigul. |
| 4. Publisher's Name | : | J. Mohamed Rahmathulla B.A.B.Com., |
| Nationality | : | Indian |
| Address | : | 3 - A, Chellandiamman Kovil Street,<br>Dindigul - 624 001. |
| 5. Editor's Name | : | S. Hussain Mohamed |
| Nationality | : | Indian |
| Address | : | 4 / 229, Meera Complex,<br>Fire Service (Opp), Dindigul. |
| 6. Name and address of in dividuals who own the newspaper and partners or share holders holding morethan one percent of the total capital. | : | **Awniyya World Peace Trust**<br>Fakira Complex<br>74, Palani Road,<br>Dindigul - 624 001. |

I, J. Mohamed Rahmathulla hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) J. Mohamed Rahmathulla
Signature of Publisher

# இந்நாளும் எந்நாளும் எமை ஆளும் தர்பாரே...!

**தொகையரா :**

நித்திய ஜீவ வலியுல்லாஹ்
நிறையும் பூரண அவ்னுல்லாஹ்
சத்திய உள்ளமை அழீமுல்லாஹ்
சர்வ யாஸீன் அலியுல்லாஹ்

இந்திய மண்ணில் தந்தனர் அரசாட்சி பீ அவ்னில்லாஹ்
முந்திய யாஸீன் வந்தனர் அலியாஸீன் பீ அவ்னில்லாஹ்
தள்ளாடும் நெஞ்சில் தவ்ஹீதின் வாசம்
தணியாமல் காக்கும் தர்பாரின் பாசம் (இந்திய)

என்னென்ன வரமோ தரும் அந்தக் கரமே
என்றெண்ணிச் சுவைத்தால் இன்னும் தேடும்
மெய்ஞ்ஞான வானில் சீராடும் சீடர்
குருநாதர் வடிவை என்றும் நாடும்
எத்திக்கும் தித்திக்கும் கலீல் என்னும் கற்கண்டு
சிந்திக்கும் வண்ணத்தில் சந்திக்கும் பூச்செண்டு
மின்னிய சூரியன் எண்ணியதே
தன்னொளி தொடரப் பண்ணியதே
குருதியில் உறுதியில் நாயகர் தரிசனம்
அவ்னெனும் யாஸீன் அலியாரே (இந்திய)

பிரிவென்று உள்ளம் பிரியத்தில் வெம்பும்
பரிவொன்று காட்டி காப்பீர் குருவே!
சரியென்று காட்டி சரிவின்றித் தூக்கி
கரைசேர்க்கும் கரமே வரமே குருவே!
கலீல்நாதர் என்றாலும் அலி யாஸீன் என்றாலும்
இந்நாளும் எந்நாளும் எமை ஆளும் தர்பாரே
திருவருள் பொழியும் தாயகமே!
திருவடி சரணம் நாயகமே!
தேடிடும் உள்ளம் தீன்பெற வேண்டும்

– இளங்கவி.அ. நைனார் முஹம்மது அன்சாரி,
**M.A., MLIS.,** ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி

# ஓ...ஜமாதுல் ஆகிர் பிறை இருபதே!

(ஜனாப். ஏ.என்.எம். முஹம்மது யூசுப் ஹக்கிய்யுல் காதிரி – கத்தார்)

மற்றவர்களின் நினைவில் நிற்கப் போராடும் மக்களைப்போல்
நாட்களும் போராடுமோ தன்னை உயர்வு படுத்திக் காட்ட!
நல்லறிஞர் பலரைத் தனக்குள் மறைத்துப் பெயர் பெறும்
நாட்களுக்குள்ளும் பெருமைப் போரோட்டமா?

நாயகத்தை மறைத்துப் பெயர்பெற்ற ரபீவுல் அவ்வல் பன்னிரண்டு
குத்பு நாயகத்தை மறைத்துப் பெயர் பெற்ற ரபீவுல் ஆகிர் பதினொன்று
நாகூர் நாயகத்தை மறைத்துப் பெயர்பெற்ற ஜமாதுல் ஆகிர் பத்து
சம்பை அப்பா நாயகத்தை மறைத்துப் பெயர்பெற்ற ஜமாதுல் அவ்வல் ஒன்று!

யாஸீன் நாயகத்தை மறைத்துப் பெயர்பெற்ற துல்கஃதா பதினேழு
இன்றுநம்தந்தை வாப்பாநாயகத்தைமறைத்துப்பேறுபெற்றஜமாதுல்ஆகிர் இருபது
நாட்களின் போராட்டத்தில் எங்களை மறந்தாயே இறையே!
எமக்களித்த அருட்கொடையைப் பறித்தாயே இறையே!

உன் நினைவை உலகில் நிறுத்த உ லக வாழ்வைத் துறந்தவரை
உன் நபியை உயிராக நினைக்க வைத்த உயிர் குருவை
ஞானக் கரு தந்து காத்த எங்கள் உயர் நாயகரை
ஏன் பிரித்தாயோ இறையே எங்களை விட்டும்?

உடல் தளர்ந்தும் உன் உண்மையைப் பறை சாற்றும்
உயர் நபியின் உண்மையை உறுதியாய் வெளிக்காட்டித்தரும்
உன்னை வணங்கும் உயர் வழியை உலகமெலாம் காட்டித் தரும்
எம் குருவை ஏன் பிரித்தாயோ இறையே எங்களை விட்டு?

ஜமாதுல் ஆகிர் இருபதாம் நாள் உன்னிடம் இறைஞ்சியதா உயர்வுபெற!
உடலெல்லாம் தளர்ந்திட உனக்காக உழைத்தவருக்கு உன் வெகுமதியோ?
பூரணமான உன்னுடன் இருந்து எங்களை ஆசீர்வதிக்க அழைத்தாயோ?
இல்லை குரு யாஸீன் அலி நாயகமாய் உருவெடுக்க வைத்தாயோ?

# ஏகத்துவ மெய்ஞ்ஞானசபை

**முதன் முதலாக திண்டுக்கல்லில் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை தொடங்கியபோது சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் வகுத்ததுக் கொடுத்த சபையின் நோக்கங்கள்.**

சங்கத்தின் நோக்கங்கள் :

1. மதத்தால், இனத்தால், மொழியால் பிளவுபட்டுள்ள மனித சமுதாயத்தை ஆன்மீகத்தால் ஒன்றிணைத்து மத நல்லிணக்கத்தையும், மனித நேயத்தையும் பேணிப் பாதுகாத்தல்.

2. மெய்ஞ்ஞான விளக்கம் நல்கி இறைவனை அறிய வழிகாட்டுதல்.

3. மெஞ்ஞான நூல்கள் வெளியிடல், யோகப் பயிற்சி மூலம் மெய்யுள வளர்ச்சி பெற்று உள் மறைந்துறையும் மா சக்தியை வெளிக்கொணர்ந்து தன் வயப்படுத்தல்.

4. மனிதன் தன்னை அறிவதான கயதரிசன அனுபவம் பெற பயிற்சி அளித்தல்.

5. ஞான மகான்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் விழா எடுத்து அவர்களை நினைவு கூர்வது மூலம் அவர்களின் கொள்கைகளை நிலைநாட்டடல்.

6. நாட்டுப் பற்றுடன் வாழ உதவுதல்.

7. ஆக்கமும் ஆக்கங்களுக்கு உறுதுணை புரிதலும்.

9. இந்திய ஒருமைப்பாட்டிற்குக்கு குந்தகம் விளைவிக்காமலும் இந்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் சட்ட திட்டங்களை மதித்து முழுமையாகக் கட்டுப்பட்டு நடத்தல்.

10. தீவிரவாத கொள்கைகள் மக்களிடம்பரவாமல் தடுத்து மக்களை அமைதி வழியில் நடக்க பாடுபடுதல்.

11. மானிட தேவ சக்திகளையறிந்து, இரண்டறக்கலக்கவும் பூரணத்துவம் அடைய முயலவும் வாய்மையும் சாந்தியும் வாய்ந்த நல் வாழ்வு வாழப் பாடுபடுதல்.

12. அனைத்து வேதங்களின் குறிக்கோளும் மெய்ஞ்ஞானத்தில் ஒன்றே எனும் உண்மையை உணரச் செய்யவும், எம்பெருமானார் ஸல்லாள்ளாஹு அலைஹி வஸல்லம் அவர்களால் அழகுடன் போதிக்கப்பட்ட இஸ்லாத்தின் அழகு நெறி முறைகளை எடுத்துச் சொல்லியும் அவர்கள் காட்டிய இறைஞானத்தை மக்கள் மனதில் ஏற்படச் செய்து மக்களிடையே வேற்றுமை நீக்கி, ஒற்றுமை, அன்பு ஆகியன வளரச் செய்து, எங்கும் சாந்தி, சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் ஆகியவற்றை நிலை நாட்டி அதன் அடிப்படையில் வாழ வழி வகுத்தல்.

13. மானிடவாழ்க்கையில் இன்றியமையாத சுகாதாரம் முதலான அவசியமான கல்விகளில் தேவையான விளக்கங்களைத் தேவைக்கேற்ப நல்குதல்.

14. கல்விக்கூடங்கள், தொழிற்பயிற்சிக்கூடங்கள் மருத்துவப் பணிமனைகள் அமைத்து மக்களுக்கு சேவைபுரிதல்.

15. பொது நல சேவைபுரிதல்.

---

✸ பட்டாடை அணியாதீர்கள்: இது பெண்கள் அணிவதாகும். அண்ணலெம் பெருமானார் (ஸல்-அம்) அவர்கள் அருளியதாக ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "பட்டாடை அணியாதீர்கள்: எவர் இதை இவ்வுலகில் அணிவாரோ, அவர் இதை மறு உலகில் அணியப் பெறமாட்டார்"

(புகாரீ – முஸ்லிம்)

# கலிமாப் பொருளறிக!

ஆசிய ஜோதி நாகூர்ப் பேரரசர் பாதுஷா நாயகம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவிலிருந்து:

விசுவாசிகளே! லா இலாஹ இல்லல்லாஹு என்ற கலிமாவைச் சொல்லி விசுவாசம் கொண்டவர்களே! அதில் இருக்கும் சகல விஷயங்களையும் நீங்கள் ஏன் விளங்கிக் கொள்ளவில்லை?

1. இந்த வாக்கியத்தில் இருக்கும் லா என்பது நாசூத்துடைய உலகத்தைக் குறிக்கிறது. மண், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கு பூதங்களால் உருவாக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் புவியுலகையும், இதன் மீது அசைந்தும், அசையாமலும், இருக்கும் அத்தனை பொருட்களையும் குறிப்பதுதான் நாசூத் எனும் பதமாகும். இந்த நான்கு பூதங்களின் சாரத்தில் தான் மனிதன் படைக்கப்பட்டுள்ளான்.

இந்த நான்கு பூதங்களும் மனித உடலில் இருந்து கொண்டு தோற்றுவிக்கும் ஆசாபாசங்கள்தான் நப்ஸ் எனும் அம்மாரா ஆகும். உலக மனிதர்களில் பெரும்பாலானோர் இந்த நப்ஸ் அம்மாராவின் பிடியில்தான் அகப்பட்டுக் கொள்கிறார்கள்.

கலிமாவில் உள்ள இரண்டாவது சொல்லான இலாஹ் என்பது சூட்சும உலகத்தை குறிக்கிறது. வானமென்றும், ஆலமே மலக்கூத் என்றும், சூட்சும வெட்ட வெளி என்றும் இதனை குறிப்பிடுவார்கள்.

இந்த மலக்கூத்துடைய பண்பு நன்மைகளை ஏவுவதாகும். மலக்கூத்துடைய தேகம் இன்ஸானுடைய உடலில் நிழலைப்போல குடிகொண்டுள்ளது. உறைக்குள் இருக்கும் வாளும் இதனை ஒப்பிடலாம்.

கலிமாவின் மூன்றாவது சொல்லாகிய இல்லா என்பது ஜபரூத் துடைய உலகத்தை குறிக்கிறது. இதுதான் ஆன்மாவின் உலகம்... ஜபரூத்துடைய உலகின் நப்ஸை நப்ஸே முத்மஇன்னா என்று கூறுவர். நப்ஸே முத்மயின்னா என்பது லிகா அல்லாஹ் எனும் அல்லாஹ்வின் தரிசனத்தை பெறக்கூடிய பண்பாகும். இது நாஸூத்துடைய உலகையும், ஜபரூத்துடைய உலகையும் பொதிந்து உள்ளது.

கலிமாவின் நான்காவது சொல்லாகிய அல்லாஹ், லாஹூத்துடைய உலகத்தை

குறிக்கும். இந்த நப்ஸே முல்ஹிமாவானது. பேரின்ப லயிப்பில் திளைக்கக்கூடியது. எந்நேரமும் ஒளி வீசிக்கொண்டிருக்கும் இந்த நப்ஸ், இல்ஹாம் எனும் இறை உதிப்புகளின் தானமாகவும் உள்ளது. ஜபரூத்துடைய உலகில், ரூஹு போன்ற இது, நாசூத், ஜபரூத், மலக்கூத் ஆகிய உலகங்களை அடைய வளைந்து நிற்கின்றது. இந்த தானத்தை ஹக்கீகத்தே முஹம்மதி என்றும் நூரே முஹம்மதி என்றும் சொல்வார்கள்.

கலிமாவின் ஐந்தாவது சொல்லான ஹு ஏகத்துவமாகிய தாத்தைக் குறிக்கின்றது. இங்கே நப்ஸ் முழுவதுமாக அழிந்து ஃபனாவாகி தெய்வீகக் காதலில் சொக்கி விடுவதால் தெய்வீகம் மட்டும் எஞ்சியிருக்கின்றது.

தன்னை அறிந்து வணங்குவதற்காகவே மனிதனைப் படைத்தேன் என்றும் நான் அறியத்தக்க புதையலாயிருந்தேன். என்னை அறியப்பட நாடினேன். மனிதனைப் படைத்தேன் என்றும் கூறுகிற ஹதீஸ் குத்ஸீயில் உள்ள உண்மைகளை சீர்தூக்கிப் பாருங்கள்.

அறிஞர்களே! சட்ட நுணுக்கங்களை மட்டும் ஆராய்வதில் கவனம் செலுத்தி, காலங்கழித்து, கண்ணிருந்தும் குருடர்களாகப் போய் விடாதீர்கள். அல்லாஹ்வைப் பற்றிய ஞானமாகிய மஃரிபத்துல்லாஹ்வை அன்றி, மறுமையில் உங்களுடன் எந்த அறிவும் துணைக்கு வரப்போவதில்லை. அல்லாஹுடைய தாத்தாகிய தத் சொரூபம் லாஹூத்து, ஜபரூத்து, மலக்கூத்து ஆகிய கண்ணாடிக் கூடுகளின் வழியே நுழைந்து, நாசூத்தாகிய மனித ஜடத்தினுள் பிரதிபலிப்பதை இலாஹி என்பார்கள். ஆனால் இந்த நாசூத்தான தேகம் அசுத்ததின் காரணமாக தாத்தின் பிரதிபலிப்பைத் தடுத்து விடுகின்றது.

இறைவனைப் பற்றிய ஞானத்தைத் தேடியடைந்து, அசுத்தமென்னும் உலக மாயைகளைக் களைந்து, தெய்வீக தரிசனத்தைக் கண்டவர்கள் அதிர்ஷ்டசாலிகளே. அவர்களின் மனமென்னும் பாத்திரத்தில் ஹுப்புல்லாஹ் என்னும் தெய்வீகக் காதல் சுரந்து விடுகிறது. அவர்களுக்கே சுப சோபனம்...

---

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوا۟ ٱسْتَعِينُوا۟ بِٱلصَّبْرِ وَٱلصَّلَوٰةِ ۚ

விசுவாசிகளே! (நீங்கள் உங்கள் முயற்சிகளில் வேற்றி அடையும்பொருட்டு) பொறுமையைக் கொண்டும், தொழுகையைக் கொண்டும் உதவி தேடுங்கள்.

(அல்குர்ஆன் 2 : 153)



# மதுரஸா நன்கொடை



### திண்டுக்கல்

திண்டுக்கல் ஜே. முஹம்மது சதக்கத்துல்லா பி.எஸ்.ஸி. மற்றும் குடும்பத்தார் அவர்கள் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் தர்ஹா ஷரீப் வளாகத்தில் ஸ்பீக்கர், மைக், சாதனங்கள் வாங்கிய வகை நன்கொடை ரூ.80000/- ம்,

சோழிங்கநலலூர் என். ஹைருன்னிஸா முன்னோர்களுக்கு (அர்வாஹுகளுக்கு) மவ்லிது ஓதி துஆ செய்ய ரூ. 1000 நிய்யத்து துஆ செய்ய ரூ. 800/ம்,

திண்டுக்கல் சதீஷ் டயர் ஒர்கஸ் திரு எஸ். ஆரோக்கிய சின்னப்பர் கிறிஸ்துமஸ் தினத்தை முன்னிட்டு ரூ. 2000/ம்,

திருப்பத்தூர் எஸ். சௌக்கத் அலி தகப்பனார் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ம்,

மேலத்திருப்பூந்துருத்தி எஸ். ராபியத்துல் பஸரிய்யா உடல் நலம் பரிபூரண சுகத்துடன் நீண்ட ஆயுளுடன்வாழ வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 2000 மகன் முஹம்மது அப்பாஸுக்கு உடனடியாக வேலை கிடைக்க வேண்டி நிய்யத் செய்து துஆ செய்ய ரூ. 1000/ம்,

மதுரை கே.புதூர் எஸ். சாகுல் ஹமீது துஆ செய்ய ஜனவரி, பிப்ரவி 2 மாத சதக்கா ரூ. 1000 வீதம் 2000/ம்,

மதுரை சபியாம்மா குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ நாகூர் பாதுஷா நாயகம் அவர்களுக்கு யாஸீன் ஓதி துஆ செய்ய ரூ. 1000/ம்,

காரைக்கால் ஆர்.ஏ. அப்துல் பாருக் பாத்திமா கடன்கள் நீங்கி குடும்பத்தார் அனைவரும் நலமுடன் வாழ துஆ செய்ய ஜனவரி, பிப்ரவரி 2 மாத நன்கொடை ரூ. 500 விதம் ரூ. 1000/ம்,

சென்னை எஸ். சர்மிளா உசேன் துஆ செய்ய சதக்கா ரூ. 2000/ம்,புர்தா ஷரீப் ஓதி துஆ செய்ய ரூ. 1000/ம், ஸலாத்துன்நாரியா ஓதி துஆ செய்ய ரூ. 1000/ம், உண்டியல் காணிக்கை ரூ. 1000/ம், நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு ரூ. 500/ம், ஹாஜத்துக்கள் நிறைவேற நிய்யத் செய்து விஷேச உணவு (பிரியாணி) கொடுத்து துஆ செய்ய ரூ. 15000/ம்,

உத்தமபாளையம் எம். அஷ்ரப் அலி 2023 செப்டம்பர் முதல் டிசம்பர் வரை மாத நன்கொடை ரூ. 2000/ம்,

உத்தமபாளையம் முஹம்மது சித்திக் விவரப்படி ரூ. 2800/ம்,

உத்தமபாளையம் பேஷன் பாரடைஸ் ரூ. 2100/ம்,

உத்தமபாளையம் தௌஃபீக் ரூ. 400/ம்,

உத்தமபாளையம் ஆசுரம்மாள் நிய்யத்படி ரூ. 300/ம்,

உத்தமபாளையம் நிய்யத்படி முஜிபுர் ரஹ்மான் ரூ. 500/ம்,

உத்தமபாளையம் நிய்யத்படி ரூ. 500/ம்,

உத்தமபாளையம் கலந்தர் சுல்தான் நிய்யத்படி ரூ. 500/ம்,

உத்தமபாளையம் அப்துல் ஜப்பார் நிய்யத்படி ரூ. 500/ம்,

முஹம்மது அப்துல்லாஹ் நிய்யத்படி ரூ. 1515/ம்,

காந்திகிராமம் என். பத்தூல் குடும்பம் சதக்கா ரூ. 1400/ம்,

திண்டுக்கல் தமீம் ஹோட்டல் உண்டியல் சேமிப்பு ரூ. 1405/ம்,

திண்டுக்கல் பி.எம். ஏ. அஷ்ரப் அலி மகள் முஜீபா பர்வீன் நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ம்,

சென்னை சனோபர் நிஷா துஆ செய்ய உணவுக்காக ரூ. 1000/ம்,

திண்டுக்கல் எம். நதீர் ஜே. முஹம்மது சதக்கத்துல்லா நிய்யத்படி ஜனவரி, பிப்ரவரி, மார்ச்ஆகிய மூன்று மாதம் நன்கொடை ரூ. 3000/ம்,

நத்தம் முஹம்மது ஷபீஃக் நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 2500/ம்,

காரைக்குடி எஸ். மும்தாஜ் பேகம் கண் சரியாகி நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1001 துஆ செய்ய உணவுக்காக ரூ. 1000/ம்,

காரைக்குடி எ. முஹம்மது மாஹிர் கண் சரியாகி நிய்யத்து நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1001/ம்,

படமாத்தூர் ஆமினா பீவி மர்ஹூம் முஹம்மது அலியார், ஷாகுல் ஹமீது – ஜமால் ஆயிசா பீவி மூன்று பேருக்கும் வருட பாத்திஹாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ம்,

மடத்துக்குளம் எஸ்.பி. சேக் அப்துலலா சாலிஹா பீவி துஆ செய்ய ஜனவரி, பிப்ரவரி 2மாத நன்கொடை யாக ரூ. 700 விதம் ரூ. 1400/ம்,திண்டுக்கல் எ. ஹாஜரா பீவி மர்ஹூம் எ.எம். அலியார் தாயார் படமாத்தூர் ஜமால் ஆயிஷா பீவி 6ஆம் ஆண்டு வருட பாத்திகாவை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ம்,

மதுரை கே.புதூர் சதீஷ் சாகுல் ஹமீது சதக்கா ரூ. 500/ம்,

ஈரோடு எம். அப்துல் கரீம் ஹாஜத்துக்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/ம்,

திருப்பத்தூர் எஸ். சௌக்கத் அலி மகன் முஹம்மது நாஸிஹ் பிறந்த நாளை முன்னிட்டு ஷைகு நாயகம் அவர்களின் துஆ பரக்கத்தால் நீண்ட ஆயுளுடன் நிறைந்த செல்வத்துடன் தேர்வில் வெற்றிபெற்று டாக்டர் ஆக துஆ செய்ய ரூ. 1000/ம்,

திருவாரூர் பூதமங்களம் முஹம்மது மஹ்தூம் நல்ல வேலை மற்றும் நல்ல வாழ்க்கை அமைய வேண்டி துஆ செய்ய ரூ. 2250/ம்,

ஆவூர் எம். முஹம்மது ஃபாயிஸ் தகப்பனார் மர்ஹூம் எ. முஹம்மது இஸ்மத் பாஷா (ஆவூர் இஸ்மத்) 7ஆம் நாள் பாத்திஹாவை முன்னட்டு ஹத்முல் குரான் ஷரீப் ஓதி முறுமை நல்வாழ்விற்க்கு துஆ செய்ய மூன்று நேர விஷேச உணவுக்கு ரூ. 2500/ம்,

ராணிப்பேட்டை நாஸிஹா பர்வீன் (பிஎம்ஏ. அஷ்ரப்அலி) நிய்யத் நிறைவேற துஆ செய்ய ரூ. 25000/ம்,

கிளியனூர் எ. அப்துல் பத்தாஹ் – ஃபஹிம் – ஃபர்ஹான் நிய்யத்துக்கள் நிறைவேற துஆ செய்ய ரூ. 500/ம்,

திண்டுக்கல் கே.ஆர் நகர் ஹாஜியா எ. நஜ்மா மர்ஹூம் கமர்தீன் நிய்யத் நிறைவேறியதை முன்னிட்டு துஆ செய்ய ரூ. 1000/ம்,

பாக்கம் கோட்டூர் மர்ஹூம் எஸ். பஜ்ருல் ஹக் மஃபிரத்திற்க்காக துஆ செய்ய ரூ. 1000/ம்,

திண்டுக்கல் மர்ஹூம் அப்லஹ் யாசிர் மஃபிரத்திற்காக துஆ செய்ய வேண்டி ரூ. 500/ம்,

உத்தமபாளையம் மர்ஹூம் எம்.எஸ். பரீதா வருட பாத்திஹாவை முன்னிட்டு மஃபிரத்திற்க்காக புனித சுபுஹான மவ்லிது ஓதி துஆ செய்ய பிரியாணி விருந்துக்கு ரூ. 15000/ம்,

கீழக்கரை ஆயிஷத் மாயிதா மகளுக்கும் மகனுக்கும் சாலிஹான மணப் பொருத்தம் அமையவும் பயணம் நல் விதமாக போகவும் துஆ செய்ய ரூ. 500/ம்,

பாக்கம் கோட்டூர் ரஹ்மத் நிஷா பஜ்ருல் ஹக் நாட்டங்கள் நிறைவேற எல்லா கஷ்டங்களும் நீங்கி சந்தோஷ மான நல்வாழ்விற்க்கு துஆ செய்ய ரூ. 1000/ம்,

மேலத்திருப்பூந்துருத்தி எஸ். ஏ. ஷேக் அலாவுதீன் வருட பாத்திஹாவை முன்னிட்டு மஃபிரத்திற்க்காக துஆ செய்ய ரூ. 1000/ம்,

கிளியனூர் முஹம்மது ஃபஹிம் மீதம் உள்ள சம்பளம் கிடைக்க வேண்டு துஆ செய்ய ரூ. 500/ம்,

திண்டுக்கல் மர்ஹூம். பிகேஎஸ் குத்புதீன், மர்ஹூம். பாபு. மர்ஹூம் அப்துல் காதர் மூவருக்கும் மஃபிரத்திற காக துஆ செய்ய ரூ. 1000/ம்.

திண்டுக்கல் ஹமீது –எம். பாஹிரா (D/o JMR) 2024 ஆம் ஆண்டிற்கு ஒரு மாணவரின் செலவுக்கு ரூ. 36000/–ம்,

முஹம்மது நிசார்(S/o மர்ஹூம் பி.கமருத்தீன் தனது இளைய மகள் துஆ பிறந்ததை முன்னிட்டும் நீண்ட ஆயுளுக்கு துஆ செய்யவும் விஷேச உணவுக்கு ரூ.15000/–ம்,

**வழங்கினர். அனைவருக்கும் நன்றி.**

# மெய்ஞ்ஞானப் பேரொளி!

*ஹெச் . ரஜியாம்மாள். மேலத்திருப்பூந்துருத்தி*

குருவே யாஸீன் அலி நாதரே
சரணம் சரணம் மலர்ப் பாதங்களே
அவ்னின் வடிவே அலி நாதரே
எங்கள் உயிரும் உணர்வும் இனி தாங்களே
காண வேண்டுமே கண்ணாரவே
ஞான ஒளி நிறை சூரியரே
கைகள் ஏந்தியே நெஞ்சாரவே – உயர்
ஞானம் வேண்டி மன்றாடினேன் (குருவே)

அவ்னாய் வந்த பேரொளியே
அறியா மனதை மாற்றிடுவீர்
தாங்கள் இல்லை எனும் நினைவை
அடியோடென்றும் நீக்கிடுவீர்
இரண்டறக் கலந்த எம் உயிரே
உங்கள் மறைவும் புதிய உதயமன்றோ
எங்கள் உயிர் குருவே எங்களுக்கு இளம்
பிறையாய் வந்தது வரமல்லவோ (குருவே)

உண்மைப் பொருளே ஓவியமே – உயிர்க்
கருவே குருவே காவியமே
உங்கள் பாதம் சரணடைய – என்றும்
ஏங்கும் ஏங்கும் என் மனமே
காலம் முழுதும் கண்மணியை
புகழ்பாடும் வரமே தந்தருள்வீர்
முக்தி நிலை அடைந்து மோட்சம் பெற
எம் குருவே எமக்கு அருள் புரிவீர்

(குருவே)

*மெட்டு: எவனோ ஒருவன் வாசிக்கிறான்*
*திரை : அலைபாயுதே*

# மணிச்சுடர் நூல் மதிப்புரை

நூல் : 'மறை ஞானப்பேழை ஆன்மிக மாத இதழ்' வெளியிட்டுள்ள "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34ஆம் தலைமுறைப்பேரர் கலீல் அவ்ன் மௌலானா நினைவு சிறப்பிதழ்"

ஆசிரியர் : கலீஃபா எஸ்.ஹுஸைன் முஹம்மது

வெளியீடு : அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை,
அத்தரீகத்துல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யா,
ஏகத்துவ மெய்ஞ்ஞான சபை
பாகிரா காம்ப்ளக்ஸ், 74, பழனி ரோடு, திண்டுக்கல் 624 001.
தொடர்பு கைபேசி எண்: 99445 76165

உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் மத்தியில் மட்டுமல்லாமல், இஸ்லாமிய சமுதாயத்தில் மிகப் பெரும் வரவேற்பை பெற்றுள்ள 'மறை ஞானப்பேழை ஆன்மிக மாத இதழ்", தனது பிப்ரவரி 2024 மாத இதழை, கடந்த ஜனவரி மாதம் 3ஆம் தேதி இயற்கை எய்திய நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34ஆம் தலைமுறைப் பேரர் ஆன்மீகப் பேராளி மௌலானா கலீல் அவ்ன் அவர்களின் நினைவு சிறப்பிதழாக வெளியிட்டுள்ளது.

மொத்தம் 132 பக்கங்கள் கொண்ட இந்த சிறப்பிதழில், ஒவ்வொரு பக்கத்திலும் கலீல் அவ்ன் மௌலானா குறித்த அரிய தகவல்கள் இடம் பெற்றுள்ளன. அரசியல் கட்சி தலைவர்கள், உலமா பெருமக்கள், கவிஞர்கள் மற்றும் பல்வேறு அறிஞர்கள் ஆகியோர் அற்புதமான எழுத்தோவியங்களை இந்த சிறப்பிதழில் வழங்கியுள்ளார்கள். "ஆன்மீகப் பேராளி கலீல் அவ்ன் மௌலானா ஏற்றி வைத்திருக்கும் ஒளிப் பிரகாசம், மறைந்த சூரியன் ஒளிரும் அதிசயம், என்றும் வாழும் எங்கள் குரு நாதர்" என பல்வேறு தலைப்புகளில் ஒவ்வொரு அறிஞர் பெருமக்களும் வழங்கியுள்ள கருத்துகள், தகவல்களை வாசிக்கும்போதும், மௌலானா கலீல் அவ்ன் அவர்களின் பெருமைகள், அவரின் வாழ்க்கை முறை, கல்விக்காக அவர் ஆற்றிய சேவைகள், இஸ்லாமிய சமுதாயத்திற்காக மௌலானா அவர்கள் ஆற்றிய பணிகளை சுருக்கமாகவும், எளிமையாகவும் அறிந்துகொள்ளும் வாய்ப்பு கிடைக்கிறது.



மௌலானா கலீல் அவ்ன் அவர்கள் குறித்து, ஒவ்வொரு கவிஞரும் உருவாக்கியுள்ள கவிதைகள் அருமை. தமிழக அறிஞர்கள் மட்டுமல்லாமல், இலங்கை அறிஞர்களும், இந்த சிறப்பிதழில் தங்களின் ஆக்கங்களை தந்து, மௌலானா கலீல் அவ்ன் அவர்களின் பணிகளையும், அவரது அன்பையும் நினைவுக் கூர்ந்து இருக்கிறார்கள். இந்த ஆக்கங்கள் ஒவ்வொன்றும் அருமை மட்டுமல்ல, இஸ்லாமியர்கள் அனைவரும் படிக்க வேண்டிய படைப்புகள் என்றே கூறலாம். இந்த சிறப்பிதழில் கலீல் அவ்ன் மௌலானா தொடர்பான அரிய புகைப்படங்களும் இடம்பிடித்துள்ளன. அவற்றை காணும்போது உள்ளத்தில் இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறது.

மறை ஞானப்பேழை மாத இதழ் வெளியிட்டுள்ள இந்த நினைவு சிறப்பிதழ், தமிழகத்தில் உள்ள அனைத்து அரபி மதரஸாக்களில் உள்ள நூலகங்களில் கட்டாயம் இடம்பெற வேண்டும். அதன்மூலம், மதரஸா மாணவர்கள், மௌலானா கலீல் அவ்ன் அவர்களை குறித்து நன்கு அறிந்துகொள்ள வாய்ப்பு கிடைக்கும். மேலும், தமிழகம் முழுவதும் உள்ள அரசு மற்றும் தனியார் நூலகங்களிலும் இந்த நூலை கொண்டு சேர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முயற்சிகள் செய்தால், அது நிச்சயம் பலன் அளிக்கும். அதன்மூலம் தமிழ் உலகம், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் 34ஆம் தலைமுறைப்பேரர் கலீல் அவ்ன் மௌலானா குறித்து விரிவாக அறிந்துகொள்ள வாய்ப்பு உருவாகும்.

- ஜாவீத்.

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2024 - 2026
Date of Publication on 7th, Posted on 10th,
of Every Month at H.P.O. Dindigul







Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee